இவ்வாறு லட்சக்கணக்கான சுற்றுலா பயணிகள் உலகம் முழுவதும் பயணம் செய்து வருகின்றனர். இதனால் அந்தந்த நாடுகளில் பொருளாதார நடவடிக்கைகள் அதிகமாகின்றது. நாட்டின் எல்லாத் துறைகளிலும் சுற்றுலாவின் தாக்கம் காணப்படுகிறது. ஏனெனில் 1997-ம் ஆண்டில் மட்டும் 439 பில்லியன் அமெரிக்க டாலர் பணம் சுற்றுலா பயணிகளால் உலகம் முழுவதும் செலவு செய்யப்பட்டுள்ளது என்ற செய்தி நமக்கு ஆச்சர்யத்தை அளிக்கிறது. 2000-ம் ஆண்டில் 698மில்லியன் பயணிகள் உலகம் முழுவதும் சுற்றுலா சென்று 476 மில்லியன் கோடி டாலர் செலவு செய்துள்ளனர்.

எனவேதான் ஒவ்வொரு நாடும் சுற்றுலா வளர்ச்சிக்கான ஆக்கப்பூர்வ நடவடிக்கைகளில் இறங்கியுள்ளன. அதிக கவனம் செலுத்துகின்றன. சுற்றுலா அமைச்சகம் உருவாக்கப்பட்டு சுற்றுலா துறை திறம்பட நிர்வகிக்கப்படுகிறது. சுற்றுலா வளர்ச்சிக்குத் திட்டமிடுதல், பொருளாதார உதவி செய்தல், சுற்றுலா பயணிகளுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுத்தல், சுற்றுலா துறையில் செய்யப்படும் புதிய முயற்சிகளுக்கு ஊக்கமளித்தல், போக்குவரத்து வசதிகளை அதிகப்படுத்துதல் ஆகியவற்றுக்கு முன்னுரிமை கொடுத்து செயல் படுகின்றன. சுற்றுலா நிர்வாகத்திற்கான பயிற்சி அளிப்பதும் அதிகரித்து வருகிறது. சுற்றுலா மையங்களின் வளர்ச்சிக்கான நடவடிக்கைகள் மேற்கொள் ளப்படுகின்றன. இவ்வாறு சுற்றுலா உள்நாட்டு மற்றும் அந்நிய செலாவணி ஈட்டித் தரும் சாதனமாக உள்ளதால் ஒவ்வொரு நாடும் சுற்றுலாவிற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகின்றன. தற்போது விண்வெளிச் சுற்றுலா கூட சாத்தியமாகிவிட்டது. 2001-ஏப்ரல் மாதம் அமெரிக்காவைச் சேர்ந்த கோடீஸ்வரர் டென்னிஸ் டைட்டஸ் என்பவர் 94 கோடி ரூபாய் கொடுத்துரஷ்ய ராக்கட்டில் விண்வெளி சுற்றுலா சென்று வந்து சாதனை படைத்து விட்டார்.

ஒரு நாட்டின் பொருளாதார நிலை, சுற்றுப்புற சூழ்நிலை, மக்களின் வாழ்க்கை நிலை- ஆகியவற்றில் சுற்றுலா துறை வளர்ச்சியின் தாக்கம் நம்மை திகைப்படையச் செய்கின்றன. எனவே தான் வரவிருக்கும் சகாப்தத்தை 'சுற்றுலா புரட்சிக்காலம்' (Tourism Revolution) என்று அழைப்பது மிகைப்படுத்திக் கூறுவது ஆகாது. இந்த சுற்றுலா புரட்சியானது அதிக நன்மைகளையும் அதிக சவால்களையும் கொண்ட புரட்சியாக உள்ளது. சுற்றுலா புரட்சி தரும் சவால்களையும் பிரச்சனைகளையும் நாம் வெற்றிகரமாக சமாளித்து விட்டால் அளவிற்கு அதிகமான நன்மைகள் கிடைக்கும் என்பதில் சந்தேகமில்லை.

# சுற்றுலா

## பொருள் விளக்கம் (Definition of Tourism):

தனிமனிதனின் மனநிறைவில் தான் சுற்றுலா அடங்கியுள்ளது. இன்பமாக பொழுது போக்கவேண்டும் என்பது மனிதனின் விருப்பமாகும். இந்த

உணர்வானது உலகம் தழுவிய ஒன்றாகும். சுற்றுலா பற்றிய அனைத்து அம்சங்களையும் நாம் படிப்பதற்கு முன்பாக 'சுற்றுலா' என்ற வார்த்தை எப்படி வந்தது என்றும் அதன் பொருள் விளக்கத்தையும் காணலாம்.

TOURISM என்ற ஆங்கில வார்த்தையின் தமிழாக்கமே சுற்றுலா ஆகும். பல இடங்களைச் சுற்றி வருவதற்கு பயணம் என்று பெயர். பயணம் என்பதின் ஆங்கில வார்த்தை TOUR ஆகும். இதிலிருந்து உருவான வார்த்தையே TOURISM.

TOUR என்ற ஆங்கில சொல்லானது TORNOS என்ற இலத்தீன் சொல்லிருந்து பிறந்தது ஆகும். டோர்னஸ் என்ற லத்தீன் வார்த்தை சக்கரத்தினைக் குறிக்கிறது. அதாவது சுற்றிவருவதைக் குறிக்கிறது. இவ்வாறு லத்தீன் மொழியிலிருந்து பிறந்த TOUR என்ற சொல்லானது கி.பி.1292-ல் ஆங்கில மொழியில் இணைந்தது. எனவே பல இடங்களுக்குச் சென்று பார்த்து விட்டு மீண்டும் தனது இருப்பிடம் வந்து சேர்வதைத்தான் இந்தTOUR என்ற வார்த்தை குறிக்கிறது.

மேலும் TOUR என்ற வார்த்தையானது TORAH என்ற ஹீப்ரு வார்த்தையிலிருந்தும் பெறப்பட்டதாக சொல்லப்படுகிறது. TORAH என்றால் யூத சட்டத்தை படித்து ஆராய்வதைக் குறிக்கிறது. சுற்றுலா என்பதும் பயணி ஒருவர் தான் செல்லும் இடங்களைப் பற்றி அறிந்து கொள்வதும் ஆகும்.

சுற்றுலா என்பதற்கான விளக்கம் பல அறிஞர்களாலும் நிறுவனங் களாலும் கொடுக்கப்பட்டுள்ளது. அவைகளை கீழே நாம் காணலாம்.

a) **ஹெர்மான் வி. ஷெல்லார்ட்** என்ற ஆஸ்திரிய நாட்டு பொருளாதார நிபுணர் 1910-ம் ஆண்டு அளித்த விளக்கமே சுற்றுலா பற்றிய மிக முந்திய விளக்கமாகக் கருதப்படுகிறது.

"பல்வேறு நடவடிக்கைகளின் கூட்டுத் தொகையே சுற்றுலா ஆகும். இது முக்கியமாக பொருளாதார நடவடிக்கை சம்பந்தப்பட்டது. ஒருநாடு, நகரம் அல்லது நாட்டின் ஒரு பகுதியில் வெளிப்பகுதியை சேர்ந்த ஒருவர் நுழைந்து, அங்கு தங்கி செயல்படுதல் சம்பந்தப்பட்ட நடவடிக்கையே சுற்றுலா ஆகும்".

("The sum total of the operators, mainly of an economic nature, which directly relates to the entry, stay and movement of foreigners inside and outside a certain country city or Region")

b) சுவிட்சர்லாந்து நாட்டுப் பேராசிரியர்களான **ஹன்ஷிகர், கிராப்ஃ** (Hunziker and Krapf) ஆகியோர் 1942-ல் சுற்றுலா என்பதற்கான விளக்கம் அளித்துள்ளனர்.



'பயணிகளின் பல்வேறு நடவடிக்கைகளின் கூட்டுத்தொகையே சுற்றுலா ஆகும். பொருள் தேடும் அடிப்படையிலோ, ஓரிடம் சென்று நிலையாகத் தங்கி வாழவேண்டும் என்ற எண்ணத்திலோ அல்லாமல் அந்நியர்களால் மேற்கொள்ளப்படும் பயணம் மற்றும் தங்குதல் ஆகியவற்றின் மொத்த உருவே சுற்றுலா ஆகும்'.

('Tourism is the totality of the relationship and phenomenon arising from the travel and stay of strangers, provided the stay does not imply the establishment of a permanent residence and is not connected with a remunerated activity')

இந்த விளக்கமானது 'சுற்றுலா அறிவியல் வல்லுநர்களின் பன்னாட்டு கழகத்தால்' (International Association of Scientific Experts in Tourism) அங்கீகரிக்கப்பட்டு அதிகாரப் பூர்வமானதாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இந்த விளக்கத்தில் சுற்றுலா என்பது பிற நாட்டைச் சார்ந்தவருடைய பயணம் என்பதும் தற்காலிகமாகத் தங்குவதும் மற்றும் பொருள் தேடுவது இன்மை என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது.

c) இங்கிலாந்தின் சுற்றுலாக்கழகம் 1976-ல் சுற்றுலா என்பதற்கான விளக்கம் கொடுத்துள்ளது.

"சுற்றுலா என்பது ஒருவர் தான் வாழ்ந்து வரும். அல்லது வேலை பார்த்து வரும் இடத்திலிருந்து வெளியிடத்திற்கு குறுகிய காலமே சென்று தங்கி அங்கு பல இடங்களுக்கு இன்பப்பயணம் மேற்கொண்டு பார்த்து வருவதேயாகும்".

("Tourism is the temporary short-term movement of people to destinations outside the places were they normally live and work and their activities during the stay at these destinations; it includes movement for all purposes, and as well as they visit and excursions")

d) **அப்துல் வஹாப்** என்பவர் கொடுத்துள்ள விளக்கம் இன்னும் தெளிவாகவும் சுற்றுலாவின் தன்மையைப் பற்றி அறிந்து கொள்வதாகவும் அமைந்துள்ளது.

"சுற்றுலா எனப்படுவது ஒரு குறிப்பிட்ட புவியியல் எல்லையைத் தாண்டியோ, நாட்டிற்குள்ளேயோ இருக்கின்ற மக்களுக்கிடையே ஓர் இணைப்பை ஏற்படுத்தக்கூடிய பயனுள்ள நடவடிக்கையாகும். அது ஊதிய நோக்கம் கருதாது, பல்வேறு வகையான விருப்பங்களை நிறைவு செய்வதற்கு மேற்கொள்ளப்படுகின்ற தற்காலிகமான வட்டாரம் நாடு கண்டம் போன்றவற்றின் இடையே ஏற்படுகின்ற இடப்பெயர்ச்சியே ஆகும்."

e) **ஜோஸ் இக்னாசியோ டி அரில்லாகா** என்பவர் சுற்றுலாவிற்கு அளித்துள்ள விளக்கம் சற்று வித்யாசமானது.

"விளையாட்டுப் போட்டிகளைக் காணச்செல்லுதல், ஊர்களைச் சுற்றிப் பார்த்தல், சைக்கிள்களில் பயணம் செய்தல், உல்லாசப் படகுகளில் பயணம் செய்தல், முகாமிடல், மனமகிழ்ச்சிக்காகப் பிற இடங்களுக்குச் செல்லுதல் ஆகியவைகளின் ஒருங்கிணைப்பாகக் கருதப்படுவதே சுற்றுலா ஆகும்".

**f) பூர்காட், மெட்லிக் ஆகியோர் தந்துள்ள விளக்கம் பின்வருமாறு:**

"சுற்றுலா என்பது ஒரு பயணியின் குறுகிய காலப் பயணமாகும்" தங்கள் இருப்பிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு பயணம் செய்வதும் அந்த இடங்களில் தற்காலிகமாகத் தங்குவதும் ஆகும். சுற்றுலாவானது ஓய்வு நேரத்துடனும் உலகத்துடனும் தொடர்புடையது. அது செல்வத்தையும் வேலை வாய்ப்பையும் உருவாக்குகிறது. அதற்கு ஒளிமயமான எதிர்காலம் உள்ளது".

g) 1981-ல் இங்கிலாந்தில் நடைபெற்ற 'பன்னாட்டு சுற்றுலா மாநாடு' சுற்றுலா பற்றி அளித்துள்ள விளக்கம் வருமாறு:

"சுற்றுலா என்பது ஒரு குறிப்பிட்ட மக்களால் தாங்கள் வசித்துவரும் சூழலுக்கு அப்பால் சென்று செயல்படும் நடவடிக்கைகளேயாகும்".

("Tourism may be defined in terms of particular activities selected by choice and undertaken outside the home environment")

இறுதியாக **பிரான் நாத்சேத்** என்பவர் தரும் விளக்கம் மிகவும் விரிவானதாகவும் சுற்றுலாவின் அனைத்து அம்சங்களையும் வெளிப்படுத்துவதாகவும் அமைந்துள்ளது.

"சுற்றுலா என்பது பிற இடங்களுக்குச் செல்லுதல், சென்ற இடங்களில் தங்குதல் ஆகிய செயல்பாடுகளிலிருந்து தோன்றுகிறது. வழக்கமாகத் தான் தங்கி பணிபுரியும் இடங்களுக்கு அப்பால்தான் பயணமும், தங்குதலும் இருக்க வேண்டும். சம்பளம் பெறுவதாகவும், வழக்கமான பணிசார்ந்ததாகவும் இருக்கக் கூடாது. மேலும் இந்தப் பயணமானது தற்காலிகமானதாகவும் சில நாட்கள், சில வாரங்கள் அல்லது சில மாதங்கள் என்று குறுகிய அளவிலேயே இருக்க வேண்டும்".

சுற்றுலா பற்றிய மேற்கண்ட பலவகைப்பட்ட பொருள் விளக்கங்களை ஆராயும் போது சுற்றுலாவின் இயல்புகளை நாம் அறிந்துகொள்ள முடிகிறது. சுற்றுலாவானது பயணத்துடன் தொடர்புடையது ஆகும். ஒருவர் தன்னுடைய இருப்பிடத்திலிருந்து மனதிற்கு இன்பம் பெறும் நோக்கத்துடன் பிற இடங்களுக்கு பயணம் செய்வது ஆகும். பயணம் செய்யும் இடங்களில் தற்காலிகமாகத் தங்குவதும் ஆகும். அத்துடன் அந்த பயணியின் தங்குதலானது பணம் சம்பாதிப்பது சார்ந்த எந்த செயலுடனும் சம்பந்தப்பட்டிருக்கக்கூடாது.



இவ்வாறு ஒருவர் தான் அறியாத புது இடங்களுக்குப் பயணம் செய்வதும், அங்கு நிலையாகத் தங்கி வாழ வேண்டும் என்ற எண்ணம் இல்லாமலும், தனது குறிக்கோளை நிறைவு செய்தலும், பொருள் ஈட்டாமையும், பல்வேறு காரணங்களுக்காகப் பணம் செலவு செய்தலுமே சுற்றுலா ஆகும். இந்த சுற்றுலாவானது ஒரு பயனுள்ள மனித நடவடிக்கையாகும். மனிதனுக்கு ஓய்வையும், அமைதியையும், மனமகிழ்ச்சியையும், உடல் நலத்தையும் அளிக்கிறது. அது ஒரு நாட்டின் சமூக, பொருளாதார, பண்பாட்டு வளர்ச்சியுடன் தொடர்புடையதாக் விளங்குகிறது.

## சுற்றுலாப் பயணி
### (TOURIST)

சுற்றுலாப்பயணி என்ற சொல்லிற்கு பல்வேறு விளக்கங்கள் கொடுக்கப் பட்டுள்ளன. பொதுவாக சுற்றுலாப்பயணி என்ற சொல்லிற்கு 'மனமகிழ்ச்சிக்காக ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்பவர்' என்று பொருள் ஆகும். "தான் வாழும் இடத்தை விட்டு இன்பத்திற்காகவோ பிற காரணங்களுக்காகவோ செல்லும் பொழுது இன்பத்தையும் கலந்தே பயணம் செய்பவர்களைச் சுற்றுலாப் பயணிகள் என்று கூறலாம். சுற்றுலாப் பயணிகள் யார் என்பதற்கு பலர் கொடுத்துள்ள விளக்கங்களைக் காணலாம்.

a) ***யுனிவர்சல் அகராதியில்*** (Dictionnaire Universal)

சுற்றுலாப்பயணி என்பதற்கு கொடுக்கப்பட்ட விளக்கம் வருமாறு:

"சுற்றுலாப்பயணி என்பவர் ஆர்வம், மகிழ்ச்சி காரணமாகவும் சுற்றுலா செல்வதால் ஏற்படும் மகிழ்ச்சியை அனுபவிப்பதற்காகவும் சுற்றுலா மேற்கொள்பவர் ஆவார். தாம் சென்ற இடங்களைப் பற்றி மற்றவர்களிடம் தற்பெருமையாகச் செல்பவரும், அதிலிருந்து மகிழ்ச்சியைப் பெறுபவரும் சுற்றுலாப் பயணி எனப்படுவார்".

("Tourist as a person who makes Journey for the sake of Curiosity or the fun of travelling to tell others that he has travelled").

**b) 1947-ல் பன்னாட்டுக் கழகத்தின்**

பொருளாதாரக் குழு கொடுத்த விளக்கம் பின்வருமாறு:

"ஒருவர் 24 மணி நேரத்திற்கு மேலாக தான் வசிக்கும் நாட்டை விட்டு வேறு இடத்திலோ, வேறு நாட்டிலோ பயணம் செய்தால் அவர் சுற்றுலா பயணி என்று அழைக்கப்படுவார்" ஆனால் இந்த விளக்கமானது பல மாற்றங்கள் செய்யப்பட்டது. "சம்பளம் இல்லாமல், வேலை நோக்கம் கருதாமல் தம்முடைய வழக்கமான இருப்பிடத்தை விட்டு விலகி புதிய நாட்டிற்குச் செல்பவரே சுற்றுலாப்பயணி" எனப்படுவார்.

மேலும் இந்த பொருளாதாரக் குழு சுற்றுலாப் பயணி யார் சுற்றுலாப் பயணி அல்லாதவர் யார் (Tourist and Non-Tourist) என்பதற்கும் விளக்கம் கொடுத்துள்ளது.

சுற்றுலாப் பயணிகள் எனப்படுவோர் "மனமகிழ்ச்சிக்காகவும், சொந்தக் காரணங்களுக்காகவும், உடல் நலத்திற்காகவும் பயணம் செய்பவர்கள், பன்னாட்டுக் கருத்தரங்குகள், மாநாடுகள் (விஞ்ஞானம், மதம், விளையாட்டு) போன்றவைகளில் பிரதிநிதிகளாகக் கலந்து கொள்பவர்கள், கப்பல் மூலமாக 24 மணி நேரத்திற்கும் குறைவாகப் பயணம் செய்பவர்கள்" ஆகியோர் ஆவர்.

சுற்றுலாப் பயணிகள் அல்லாதோர் எனப்படுபவர்கள், "வேற்று நாட்டிற்குச் சென்று குடியேறுபவர்கள், ஒரு நாட்டிற்கு வேலை செய்வதற்காகச் செல்பவர்கள், விடுதிகளில் தங்கி படிக்கச் செல்லும் மாணவர்கள், 24 மணி நேரத்திற்கும் மேலாக ஒரு நாட்டில் பயணம் செய்து அந்த நாட்டைக் கடப்பவர்கள்" ஆகியோர் ஆவர்.

c) **லிக்கோரிஷ்** (Lickorish) என்பவர் கூறுவதாவது :

"தான் வசிக்கும் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு சென்று அங்கு 24 மணி நேரத்திற்கு அதிகமாகவும் 12 மாதத்திற்குக் குறைவாகவும் தங்குபவரே சுற்றுலாப்பயணி என்று அழைக்கப்படுவார்".

d) **நார்வல்** என்ற பொருளாதார நிபுணர் கூறுவதாவது:

"நிரந்தரமாகத் தங்கும் நோக்கம் இல்லாமலும், வேலை செய்யும் நோக்கம் இல்லாமலும் மற்றொரு நாட்டிற்குச் சென்று தற்காலிகமாகத் தங்கி தான் சம்பாதித்த பணத்தை செலவு செய்பவரே சுற்றுலா பயணி என்று அழைக்கப்படுவார்".

(Norvel defines Tourist as "every person who comes to a foreign country for a reason other than to establish permanent residence or to work there regularly and who spends, in the country of his temporary stay the money he has earned elsewhere")

நார்வெலின் இந்த பொருள் விளக்கத்தில் சுற்றுலாவின் பொருளாதார முக்கியத்துவம் வலியுறுத்தப்படுகிறது. சுற்றுலாவின் கல்வி, கலாச்சார, சமூக முக்கியத்துவத்திற்கு மேலாக பொருளாதாரம் முக்கியத்துவம் பெறுகிறது. சுற்றுலா சந்தையின் மிக முக்கியமான அம்சமே சுற்றுலா பயணிதான். சுற்றுலா பயணிகளின் செயல்பாடுகளே சுற்றுலாவின் சாராம்சம் ஆகும்.

e) **சுற்றுலா பயணி** என்பதற்கு **1971-ம் ஆண்டு முதல் இந்தியா** வகுத்துள்ள பொருள் விளக்கம் வருமாறு:

"ஒரு வெளிநாட்டு பாஸ்போர்ட்டுடன் நிரந்தரமாக தங்காமலும், வேலை நோக்கம் இல்லாமலும் 24 மணி நேரத்திற்கு அதிகமாக தங்க வருபவர்களே சுற்றுலா பயணி எனப்படுவர்"



(A person visiting on a foreign passport for a period of not less than 24 hours for non-immigrant, non employment tourist purposes)

இந்த பொருள் விளக்கத்தில் ஒரு சுற்றுலா பயணி தங்கும் அதிகபட்ச காலம் நிர்ணயம் செய்யப்படவில்லை. 1963-ம் வருடம் ஐ.நா சபையின் சார்பாக நடைபெற்ற உலக சுற்றுலா மாநாட்டின் பரிந்துரைகளின்படி இந்த அதிகபட்சம் தங்கும் காலம் நிர்ணயம் செய்யப்படவில்லை.

சுற்றுலா பயணிகள் யார் என்பது பற்றிய மேற்கண்ட விளக்கங்களின் அடிப்படையில் நாம் பொதுவாக ஒரு முடிவுக்கு வரமுடிகிறது. அதாவது "24 மணி நேரத்திற்கு மேலாக ஒரு நாட்டில் பொழுதுபோக்கு, ஓய்வு, மனமகிழ்ச்சி ஆகியவற்றிற்காகத் தங்குபவர்களே சுற்றுலா பயணிகள்" என்று நாம் கூற முடியும். ஆனால் தாம் வாழும் நாட்டைவிட்டு பிற நாடுகளில் பயணம் செய்பவர்களே சுற்றுலா பயணி ஆவார் என்ற விளக்கத்தை நாம் ஏற்க முடியாது. காரணம் அந்த விளக்கத்தில் ஒரு நாட்டிற்குள்ளேயே விடுமுறையைச் செலவு செய்பவர்களைக் கணக்கில் எடுத்துக்கொள்வதில்லை. பலரின் கருத்துப்படி அவரும் சுற்றுலாப் பயணியே ஆவார். சுற்றுலாப் பயணிகளை கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்.

## a) இன்ப சுற்றுலாப் பயணிகள்: Excursionist

தற்காலிகமாக இருபத்திநான்கு மணிநேரத்திற்கும் குறைவாகப் பயணம் செய்பவர்களே இன்பச் சுற்றுலா பயணிகள் எனப்படுவர். உள்நாட்டில் சுற்றுப் பயணம் செய்பவர்களும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் இருபத்திநான்கு மணி நேரத்திற்கும் குறைவாகச் செலவிடுபவர்கள் இன்பச் சுற்றுலா பயணிகள் ஆவர்.

## b) பொழுதுபோக்கு பயணிகள்: Recreationers

ஓய்வுநேரத்தைத் தமது அறிவைக்கொண்டும், திறமைகளைக் கொண்டும் பயனுள்ள முறையில் பொழுதுபோக்க விரும்புபவர்களைப் பொழுது போக்குப் பயணிகள் என்று கூறலாம். ஓய்வு எடுத்தல், விளையாடுதல், நல்ல உணவு வகைகளை உண்ணுதல், மதுபானங்களை அருந்துதல், தோட்ட வேலை செய்தல், விருந்துகளில் பங்கெடுத்தல், வாகனங்கள் ஓட்டுதல், படகு விடுதல், மீன்பிடித்தல்.போன்றவை பொழுது போக்குகளாகும். இந்த பொழுது போக்குகளில் ஏதேனும் ஒரு நிகழ்ச்சியில் பங்கு பெறுதல் தன்வினைப் பொழுது போக்கு என்று பெயர். விளையாட்டுகளைக் காணச் செல்வது பிறவினைப் பொழுதுபோக்கு என்றும் கூறலாம். மேற்கூறப்பட்ட காரணங்களில் ஏதேனும் ஒன்றிற்காக ஒருவர்தாம் வாழும் இடத்தை விட்டு பிற இடங்களுக்குச் சென்றால், அவர் பொழுதுபோக்கு பயணி எனப்படுவார். இந்த வகைப் பயணிகள் மேலை நாடுகளில் அதிகமாகக் காணப்படுகின்றனர்.

### c) விடுமுறையைச் செலவிடுபவர் Vacationers:

விடுமுறை நாட்களில் தாம் வாழும் இடத்திலிருந்து பிற இடங்களுக்குச் சென்று ஓய்வு எடுத்துக் கொள்பவர்களையும், நாள்தோறும் செய்யும் வேலைகளிலிருந்து விடுபட விரும்புபவர்களையும் விடுமுறையைச் செலவிடுபவர் என்று கூறலாம். ஆனால் சுற்றுலாப் பயணியையும் விடுமுறையைச் செலவு செய்யச் செல்லும் பயணியையும் வேறுபடுத்துவது சற்று கடினமாகும். சுற்றுலா பயணி என்பவர் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குத் தொடர்ந்து பயணம் செய்பவர் ஆவார். ஆனால் அதிகமான சுற்றுலாப் பயணிகள் தங்கள் பயணத்தில் ஒரு இலக்கை அடைந்தவுடன் சிறிது காலம் அங்கேயே தங்கிவிடுகின்றனர். விடுமுறையைச் செலவு செய்பவர் தம்முடைய நாட்டிலும் செலவு செய்யலாம் அல்லது வெளிநாட்டிற்கும் செல்லலாம்.

### d) கடந்து செல்லும் பயணியர் : Transient Tourist

மாற்று வாகனங்களில் பயணம் செய்வதற்காக ஓரிடத்தில் தன் பயணத்தை நிறுத்திவிட்டு பல இடங்களைச் சுற்றிப் பார்த்துவிட்டு வருபவரைக் 'கடந்து செல்பவர்' என்று கூறலாம்.

இவ்வாறு மனமகிழ்ச்சி அல்லது ஏதேனும் ஒரு குறிக்கோளுடன் பொருளீட்டும் நோக்கம் இன்றி நிலையாகத் தங்காமல் பணம் செலவு செய்து இருபத்திநான்கு மணி நேரத்திற்கும் மேலாக ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குச் செல்பவரை சுற்றுலா பயணி எனலாம். இவர்களில் மேற்கண்ட இன்பச்சுற்றுலா பயணிகள் விடுமுறையைச் செலவிடுபவர், பொழுதுபோக்கு பயணிகள், கடந்து செல்லும் பயணியர் ஆகியோர் இன்பநோக்கு பயணிகள் எனப்படுவர். வணிகர்கள் கல்வி நிபுணர்கள், தொழிற்துறையினர், நண்பர்கள், உறவினர்கள் ஆகியோரை காணச் செல்பவர்களை இன்ப நோக்கில்லாத பயணிகள் என்று கூறலாம். அவர்களின் பயணத்தில் இன்பம் இறாது. இருப்பினும் மனமகிழ்ச்சிக்காகச் சிறிது நேரத்தையும் பணத்தையும் செலவிடுவர். ஆனாலும் இவர்கள் இன்ப நோக்கில்லாத பயணிகள் என்றே வழங்கப் படுகின்றனர். இவ்வாறு சுற்றுலாப் பயணிகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

### ஜெட் விமானம் அறிமுகம் :

1958-ம் ஆண்டு ஜெட்விமானங்கள் (Jet flights) அறிமுகப்படுத்தப்பட்டது. இது சுற்றுலாப் பயணிகள் வசதியாகவும், சொகுசாகவும், அதிவேகமாகவும் பயணம் செய்ய உதவின. இதன் விளைவாக 1960-முதல் விமானப்பயணம் வேகமான வளர்ச்சி அடைந்தது. அகன்ற பெரிய அதிநவீன போயிங் 747, மெக்டனல் டக்ளஸ் D.C.10, ஏர்பஸ் A. 300, ஏர்பஸ் A. 320, லாக்ஹீட் ட்ரிஸ்டார் L.1011 ஆகிய விமானங்கள் அறிமுகப்படுத்தப்பட்டதால் விமானப் போக்குவரத்து பெரிதும் முன்னேற்றம் அடைந்தது. விமானக் கட்டுமானத்தில் ஏற்பட்ட தொழில் நுட்பத்திறன் வளர்ச்சியினால் கன்கார்ட், டுபுலாவ் 144 (Concorde, Tupplov, 144) ஆகிய சூப்பர் சோனிக் அதிவேக விமானங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இது சுற்றுலாப் பயணியர்களுக்கு மயிர்க்கூச்சரியும் புது பயண அனுபவங்களைக் கொடுத்தது. இவை சுற்றுலா வளர்ச்சியை அதிகரித்தது.

இவ்வாறு நவீன காலத்தில் பலகாரணங்களால் சுற்றுலா வேகமான வளர்ச்சியடைந்து வருகிறது. மொத்தத்தில் நவீன காலத்தில் சுற்றுலா வளர்ச்சிக்கு பொருளாதார, சமுதாய, தொழில்நுட்ப காரணங்களே பிரதானமாக அமைந்துள்ளன. உலகின் பல நாடுகளில் மக்களின் வாங்கும் திறன் அதிகரித்துள்ளது. மேலும் முன்னேறிய நாடுகளில் வருடாந்தர விடுமுறை சுற்றுலா வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கிறது. நவீனகால சுற்றுலா வளர்ச்சியடைவதற்கு மக்கள் மனதிலே ஏற்பட்ட புதிய எண்ணங்களும் சமூக சிந்தனைகளுமே ஆகும். ஒரு காலத்தில் செல்வம் படைத்தவர்களே சுற்றுலா செல்ல முடியும் என்று இருந்த நிலை மாறி தற்போது எல்லாத்தரப்பு மக்களும் சுற்றுலா மேற்கொள்ள முடியும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. இறுதியாகப் போக்குவரத்தில் ஏற்பட்ட வளர்ச்சியும், அரசாங்கத்தின் ஆதரவும், சுற்றுலாக்கழகங்களின் தோற்றமும் நவீனகால சுற்றுலா வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுகின்றன.

# 3. சுற்றுலா வளர்ச்சிக்கான காரணங்கள்

## (CAUSES FOR THE GROWTH OF TOURISM)

ஒவ்வொரு மனிதனும் இன்பப் பொழுது போக்கிற்காகத் தனது விருப்பத்திற்கேற்ப பல இடங்களுக்குப் பயணம் மேற்கொள்கின்றான். இந்த நிலையில் அற்புதமான அதிசயமான பழமைச் சிறப்புள்ள மையங்களையும் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் இயற்கைக் காட்சிகளையும், சமயத்



தொடர்பான புனித ஸ்தலங்களையும் குளுமையான கோடை மலை வாசஸ்தலங்களையும் ஆடம்பரம்மிக்க, ஆரவாரமிக்க நகரங்களையும் கண்டுகளிக்க அவன் மனம் துடிக்கிறது. எனவேதான் மனிதன் பொருட்செலவையும் பாராமல் சுற்றுலா செல்கிறான். இதனால்தான் அண்மைக் காலத்தில் சுற்றுலா பெரும் வளர்ச்சியடைந்து வருகிறது. ஒவ்வொரு நாட்டிலும் சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. சுற்றுலா வளர்ச்சிக்கான பல்வேறு காரணங்களை இனி காணலாம்.

### 1) அதிகமான ஓய்வு (Rest and Relaxation) :

தற்காலத்தில் ஒவ்வொரு நாட்டிலும் பணிபுரியும் மக்களுக்கு அதிகமாக ஓய்வு கிடைக்கிறது. இதற்கு முக்கிய காரணம் விடுமுறை நாட்கள் அதிகமாகக் கிடைப்பதேயாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டில் பல நாடுகளில் வாரத்திற்கு எழுபது மணி நேரம் வேலை நேரமாக இருந்தது. ஆனால் அது படிப்படியாகக் குறைக்கப்பட்டு தற்போது வாரத்திற்கு நாற்பது மணி நேரமாகக் குறைக்கப்பட்டுள்ளது. மேலும் வார இறுதி நாட்களான சனி ஞாயிறு விடுமுறை விடப்படுகிறது. ஜியோன் பிராஸ்டிக் என்பவர் இதுபற்றிக் குறிப்பிடும் போது வாரத்திற்கு முப்பது மணி நேரம் உழைத்தாலே போதும் என்கிறார். இது தவிர சமய விடுமுறையும், ஆண்டு விடுமுறையும் வழங்கப்படுகிறது. 1949-ல் உலகத் தொழிலாளர் நிறுவனம் மாதச் சம்பளத்துடன் கூடிய ஆறுவார விடுமுறை அளிக்கப்பட வேண்டும் என்று கூறியது.

இவ்வாறு விடுமுறை அதிகமாக கிடைப்பதால் ஓய்வு நேரமும் அதிகமாகக் கிடைக்கிறது. ஓய்வு நேரம் அதிகமாகக் கிடைப்பதால் மக்கள் சுற்றுலா செல்வதும் அதிகமாகிறது.

### 2) தொழில் வளர்ச்சி (Industrial Development) :

தற்காலத்தில் ஒவ்வொரு நாட்டிலும் தொழில் வளர்ச்சி பெருகி வருகிறது. புதிய தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டு அதனால் நகரங்களும் வளர்ந்து வருகின்றன. இவ்விதம் தொழிற்சாலைகள் பெருகியதால் நகரங்களில் மாசு, ஒலி போன்றவை அதிகமாகிவிட்டன. மேலும் மக்கள்தொகை பெருக்கத்தினால் அசுத்தமும் சுகாதாரச் சீர்கேடுகளும் தோன்றலாயின. மேலும் மக்கள் சிறிய அறைகளிலும், அடுக்கு மாடிக்கட்டிடங்களிலும் அடைபட்டுக் கிடக்கிறார்கள். எனவே விடுமுறையின் போது சுத்தமான காற்று, சூரிய வெளிச்சம், அமைதியான சூழ்நிலை போன்றவற்றிற்காக மக்கள் சுற்றுலா செல்ல நினைப்பது இயற்கையே.

### 3) வருமான உயர்வு (Increase in Income) :

தொழில் வளர்ச்சியின் விளைவாக தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்களின் எண்ணிக்கையும் உயர ஆரம்பித்தது. மேலும் வேலை

தொழிற்சாலை மற்றும் அலுவலகங்களில் வேலை செய்பவர்களின் வருமானமும் உயர்ந்தது. வருமானம் அதிகமாகும் போது மகிழ்ச்சிக்காகவும் மனநிம்மதிக்காகவும் அதில் ஒரு பகுதியை செலவு செய்ய தயார் ஆகிறார்கள். எனவே சுற்றுலாவுக்காக தங்கள் வருமானத்தில் ஒரு பகுதியை ஒதுக்க ஆரம்பிக்கும் போது சுற்றுலா வளர்ச்சியடைகிறது.

## 4) வாழ்க்கை முன்னேற்றம் (Standard of Living) :

வருமானம் அதிகரிக்கும் போது மக்களின் வாழ்க்கைத்தரமும் உயர்வடைகிறது. சொகுசான வாழ்க்கை வாழ ஆரம்பிக்கிறார்கள். தற்காலத்தில் தங்கள் வீட்டிலிருந்தபடியே பல இடங்களை தொலைக்காட்சி மூலம் பார்க்க முடிகிறது. உலகில் எழில் கொஞ்சும் இடங்களையும், மனங்கவரும் வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களையும் காண ஒவ்வொருவரும் விரும்புகின்றனர். இதற்காகவே தங்கள் வருவாயில் ஒரு பகுதியை சுற்றுலாவிற்காகச் சேமித்து வைக்கிறார்கள். அத்துடன் குடும்பத்தில் வருடத்திற்கு ஒரு முறை சுற்றுலா செல்வது முக்கியமான அம்சமாக மாறியுள்ளது. எனவே மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதால் சுற்றுலாவும் வளர்ச்சியடைகிறது.

## 5) கல்வி வளர்ச்சி (Development of Education) :

கல்விவளர்ச்சி சுற்றுலா வளர்ச்சிக்கு பெரிதும் காரணமாகிறது. கிராமங்களில் படித்துமுடித்த மாணவர்கள் மேற்படிப்புக்காக தூர இடங்களிலுள்ள கல்வி நிலையங்களுக்கு பயணம் மேற்கொள்கின்றனர். கல்லூரிகளில் படிக்கும்போது கல்வி தொடர்பான சுற்றுலாக்கள் நடைபெறுகின்றன. விளையாட்டுகள் தொடர்பான பயணங்கள், போட்டிகள், பண்பாட்டு நிகழ்ச்சிகள் தொடர்பான பயணங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அது போலவே NSS மற்றும் NCC மாணவர்கள் அவை தொடர்பான பயணங்களை மேற்கொள்கின்றனர். எனவே கல்வி வளர்ச்சியானது சுற்றுலா வளர்ச்சிக்கு பெரிதும் காரணமாகிறது.

## 6) அரசாங்கத்தின் ஆதரவு (Support of the Government) :

அரசாங்கத்தின் ஆதரவினால் சுற்றுலா பெரிதும் வளர்ச்சியடைந்து வருகிறது. சுற்றுலாவின் முக்கியத்துவத்தை அறிந்த உலக நாடுகள் தங்கள் நாடுகளில் சுற்றுலா வளர்ச்சிக்கான திட்டங்கள் தீட்டுகின்றன. சுற்றுலாவை மேம்படுத்தும் கொள்கைகள் வகுக்கப்படுகின்றன. வரவு செலவு திட்டத்தில் சுற்றுலா வளர்ச்சிக்கான அதிகமான நிதி ஒதுக்கப்பட்டு வருகிறது. ஐக்கிய நாடுகள் சபையின் அங்கங்களான உலகத் தொழிலாளர் அமைப்பு, உலக சுற்றுலா மையம் ஆகியவை தங்கள் உறுப்பு நாடுகளுக்கு சுற்றுலா வளர்ச்சிக்கான பயிற்சி முகாம்கள் நடத்துவதுடன் அவற்றிற்கான உதவியும் செய்து வருகின்றன.



## 7) சம்பளத்துடன் கூடிய விடுமுறை (Paid Holiday) :

தொழிற்புரட்சியின் முக்கிய விளைவுகளில் தொழிற்சங்கங்களின் தோற்றமும் ஒன்றாகும். தொழிலாளர்களின் பலவிதமான உரிமைகளுக்காகப் போராடிய இந்த தொழிலாளர் இயக்கங்கள் ஊதியத்துடன் கூடிய விடுமுறையையும் தொழிலாளர்களுக்கு வாங்கித் தந்தன. இதன் விளைவாக தொழிலாளர்களுக்கு பணமும், நேரமும் கிடைத்தது. இதனால் தொழிலாளர்கள் சுற்றுலா செல்ல வாய்ப்பு கிடைத்தது. இதனால் சுற்றுலாவும் வளர்ச்சியடைந்தது.

## 8) போக்குவரத்தின் வளர்ச்சி (Development of Transports)

தற்காலத்தில் நவீன அறிவியல் கண்டுபிடிப்புகளால் ஒரு பயணி ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்துக்கு விரைவாக செல்வது சுற்றுலாவில் சிறப்பிடம் பெறுகின்றது. உலகின் எந்த மூலைக்கும் விமானம் மூலம் விரைவாகச் சென்றடையும் நிலை உள்ளது. சிலமணி நேரத்தில் ஆயிரக் கணக்கான மைல் தூரம் செல்ல முடிகிறது. குறிப்பிட்ட நேரங்களில் அட்டவணைப்படி செல்லும் விமானங்கள் சிறப்பு விமானங்கள் ஆகியவை சுற்றுலா வளர்ச்சியை அதிகப் படுத்தியுள்ளன. இது தவிர ரயில், கப்பல், சாலைப் போக்குவரத்துக்களின் வளர்ச்சியும் சுற்றுலா வளர்ச்சிக்கு பெருந்துணை புரிந்தது.

## 9) அமைதியான அரசியல் சூழ்நிலை (Peaceful political condition):

நாட்டில் நிலவும் அமைதியான அரசியல் சூழ்நிலையும் சுற்றுலா வளர்ச்சிக்குத்துணை புரிகிறது. அரசியல் சூழ்நிலை நிலையானதாகவும், அமைதியானதாகவும் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் பயமில்லாமல் வருவர். குழப்பமான அரசியல் நிலை இருக்கும் நாடுகளுக்கும், தீவிரவாதத்தன்மை காணப்படும் பகுதிகளுக்கும் யாரும் சுற்றுலா செல்வதில்லை. இதற்கு உதாரணமாக இந்தியாவிலுள்ள காஷ்மீர் அழகு கொஞ்சும் இடமாக இருந்தும் அங்கு தீவிரவாதிகளின் நடமாட்டத்தால் காஷ்மீரில் சுற்றுலா பயணிகளின் வரவு வெகுவாகக் குறைந்து விட்டது. எனவே அமைதியான அரசியல் சூழ்நிலை சுற்றுலாவை ஊக்குவிக்கிறது என்பதில் சந்தேகமில்லை.

## 10) பயணிகளைக் கவரும் திட்டங்கள் (Attractive plans) :

தற்காலத்தில் சுற்றுலாவின் முக்கியத்துவத்தை எல்லா நாட்டு அரசாங்கங்களும் நன்றாகவே உணர்ந்துள்ளன. அது எந்த அளவிற்கு அந்நிய செலவாணியை ஈட்டித் தருகிறது என்பதை உணர்ந்துள்ளன. எனவேதான்

சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க கவர்ச்சிகரமான திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகின்றன. நீண்ட தூரம் பயணம் செய்பவர்களுக்கு பல வசதிகளையும் சலுகைகளையும் செய்து கொடுக்கின்றன. சலுகை கட்டணங்களை அளித்து பயணிகளை கவர்கின்றன. இவ்வாறு அரசாங்கமானது பயணிகளைக் கவருவதற்காகப் பல திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருவதால் சுற்றுலா வளர்ச்சியடைகிறது.

## 11) விளம்பரங்கள் (Advertisements) :

விளம்பரங்கள் மூலம் சுற்றுலா வளர்ச்சியடைகிறது. ஒவ்வொரு நாடும் தங்கள் நாட்டிற்கு வரும்படியாக விளம்பரங்கள் மூலம் சுற்றுலாப் பயணிகளுக்குத் தெரியப்படுத்துகின்றன. பிற நாடுகளில் சுற்றுலாத் தகவல் மையங்களைத் திறந்துள்ளன. தங்கள் நாடுகளில் உள்ள இயற்கை அழகு மிக்க இடங்கள், நீர் வீழ்ச்சிகள், கலாச்சார மையங்கள், வரலாற்று சிறப்பு மிக்க இடங்கள் பற்றிய தகவல்களை கையேடுகளில் பதிப்பித்து வெளியிடுகின்றன. சில நாடுகள் உலகச் சுற்றுலா வல்லுநர்களிடம் ஆலோசனைகளைப் பெற்று தங்கள் நாடுகளைச் சுற்றுலாப் பயணிகளைக்கவரும் நாடுகளாக மாற்றி வருகின்றன. இன்னும் சில நாடுகள் உலக வங்கியில் கடன்பெற்று சுற்றுலாத் துறையை மேம்படுத்துகின்றன. சில நாடுகள் அமெரிக்காவிடமிருந்து பண உதவியும் ஆலோசனைகளும் பெறுகின்றன. விளம்பரத்திற்காகவே தனியாக குறிப்பிட்ட தொகை ஒதுக்கப்படுகிறது. ரஷ்யா, சீனா போன்ற நாடுகள் கூட சுற்றுலாவிற்கு முக்கியத்துவம் கொடுக்க ஆரம்பித்துவிட்டன. இவ்வாறு விளம்பரத்தினால் இன்று உலகப் பயணிகளின் எண்ணிக்கை பெருகியுள்ளது.

## 12) ஒழுங்கமைக்கப்பட்ட சுற்றுலாக்கள்: (Package tours)

சுற்றுலாக்கள் குழுவாக ஒழுங்கு செய்யப்படுவதால் தனிப்பட்ட நபருக்கு சுற்றுலா செல்வதற்கான ஏற்பாடு மற்றும் தங்கும் வசதிகள் எளிமையாகக் கிடைக்கிறது. பயணச் செலவுகளும் குறைவாகவே உள்ளது. எனவே குழுச் சுற்றுலா சாதாரண மக்களையும் தூரப்பயணம் மேற்கொள்ளத் தூண்டுகின்றன. உதாரணமாக வடஇந்தியாவுக்கு காசி வரை சென்று பல புண்ணிய ஸ்தலங்களை தரிசித்துவிட்டு காசி வர தனி நபரால் பஸ் ஏற்பாடு செய்யப்படுகிறது. எல்லா ஏற்பாடுகளையும் அவரே பார்த்துக் கொள்கிறார். பயணம் செய்பவருக்கு எந்த சிரமமும் ஏற்படுவதில்லை. இந்த மாதிரி ஒழுங்கமைக்கப்பட்ட சுற்றுலாக்கள் சுற்றுலா வளர்ச்சிக்குக் காரணமாகிறது.

மேற்கண்ட சுற்றுலா வளர்ச்சிக்கான காரணங்களின் அடிப்படையில் 1970-ல் சுவிட்சர்லாந்து கூட்டாட்சி பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த லூயிஸ் எர்டி (Louis Erdy) என்பவர் சுற்றுலா வளர்ச்சிக்கான காரணங்களை வரிசைப்படுத்துகிறார். அவை:



1) Greater affluence and more leisure
2) Emancipation of the young and higher wages
3) Transport facilities, especially air Transport
4) Growth of International business
5) Package tours
6) Relief from adverse claimatic conditions
7) Status symbol
8) Conferences and business meetings
9) For Better Education
10) World exhibitions and trade fairs
11) Publicity
12) Ideological pressure groups (Political, scientific, cultural)

## சுற்றுலா வளர்ச்சிக்கு இருக்கும் தடைகள் :

அனேக மக்கள் சுற்றுலா செல்வதில்லை. அநேக மக்கள் அதிக தூரமான இடங்களுக்குச் சுற்றுலா செல்வதில்லை. இது சம்பந்தப்பட்ட பல உளவியல் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அந்த ஆராய்ச்சிகளின் முடிவில் சுற்றுலா வளர்ச்சிக்கான தடைகள் என்று கீழ்க்கண்டவை வரையறுக்கப்பட்டுள்ளது.

### a) செலவு : (Expense)

அனேக மக்கள் சுற்றுலா செல்வதற்கு செலவழிக்க முடியாத சூழ்நிலைகளில் உள்ளனர். இவர்களால் வெளிநாட்டுப் பயணங்களோ நீண்ட தூரப் பயணங்களோ மேற்கொள்ள முடியாது. மேலும் உணவு, உடை போக்குவரத்து, தங்குமிடம் ஆகியவற்றின் விலைகள் அதிகமாக உயர்ந்துவிட்டன. எனவே ஏழை எளிய மக்களாலும் சாதாரணத் தொழிலாளர்களாலும் சுற்றுலாவிற்காக செலவு செய்ய முடிவதில்லை. இந்தியாவில் 47 சதவீதத்துக்கு மேல் மக்கள் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழ்கிறார்கள். இவர்கள் சுற்றுலா செல்ல முடியாத நிலையில் உள்ளனர்.

### b) நேரமின்மை (Lack of time):

அனேக மக்களுக்கு சுற்றுலா செல்வதற்கு நேரமே கிடைப்பதில்லை. தொழிற்துறையிலுள்ள நிர்வாகத்துறை அதிகாரிகள் தொழிலில் அதிக கவனம் செலுத்தும் காரணத்தினால் எங்கும் செல்ல இயலுவதில்லை. ஓய்வுநேரம் கிடைப்பதில்லை. மேலும் தொழில் அதிபர்களுக்கு நேரம் கிடைப்பதில்லை. இவர்கள் தவிர மாத ஊதியத்தில் இருப்பவர்களுக்கும் சுற்றுலா செல்ல நேரம் கிடைப்பதில்லை.

## 1) போக்குவரத்து
### (TRANSPORT)

சுற்றுலாவில் போக்குவரத்து என்பது அதன் பிரிக்கப்பட முடியாத ஒரு அங்கமாகும். போக்குவரத்து வசதி இருந்தால்தான் சுற்றுலா பயணி சுற்றுலா மையத்தைச் சென்றடைய முடியும். போக்குவரத்தில் பலவகை வாகனங்கள் இடம் பெற்றுள்ளன. மோட்டார்கார்கள், ரயில்,கப்பல், ஆகாய விமானம் போன்றவை சுற்றுலா போக்குவரத்துக்குப் பயன்படும் வாகனங்களாகும். சுற்றுலா மையங்களுக்கு ஏதேனும் ஒரு வகை வாகனப் போக்குவரத்து வசதி செய்து தரப்பட வேண்டும்.

ஒரு சுற்றுலா பயணி தனது சுற்றுலா செலவில் நாற்பது சதவீதம் போக்குவரத் திற்கு செலவு செய்கிறார். ஏனெனில் அதிக நேரம் பயணத்தில் செலவிடுவதே யாகும். எனவே தான் போக்குவரத்து வசதி சுற்றுலாவில் முக்கியத்துவம் பெறுகிறது. நல்ல வசதியான, திறமையான போக்குவரத்து வசதி செய்யப்படாம லிருந்தால் சுற்றுலா செல்வதற்கான கஷ்டங்கள் தெரியவரும். போக்குவரத்து வசதிகள் சாதாரணப் பயணிகளுக்கும், சுற்றுலாப் பயணிகளுக்கும் மிகவும் வேறுபட்டு இருக்கிறது. சுற்றுலாப் பயணிகளுக்கு நம்பிக்கையான, பாதுகாப்பான, வசதியான, சந்தோஷமான, சிக்கனமான போக்குவரத்து வசதி அவசியம் தேவைப்படுகிறது.

ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு சுற்றுலா செல்வதற்கு வான்வழிப் போக்குவரத்து பயன்படுகிறது. ஒரு சில நேரம் ஒரு சுற்றுலா மையத்திலிருந்து மற்றொரு சுற்றுலா மையத்திற்கும் வான்வழிப் போக்குவரத்து உபயோகிக்கப்படுகிறது. பணம் அதிகம் செலவு செய்யத் தயாராக இருப்பவர் களுக்கு இந்த விமானப் போக்குவரத்து ஒரு வரப்பிரசாதம் ஆகும்.

ஆனால் சுற்றுலா மையங்களுக்கிடையே பயணம் செய்வதற்கு ரயில் சாலை மற்றும் நீர் மார்க்கம் வழியாக செல்வது அதிக சந்தோஷத்தை அளிக்கிறது. இயற்கை காட்சிகள் நிறைந்த இடங்கள் வழியாக செல்லும்போது உண்மையான சந்தோஷம் கிடைக்கிறது. ரயில் வண்டி மூலம் செல்லும் பயணமே மிகச்சிறப்பானதாக இருக்கும் என்று பயணிகள் கூறுவதை உணரலாம்.

### ரயில் போக்குவரத்து :Railways

இந்தியாவைப் பொருத்த அளவில் போக்குவரத்து வசதிகளை மேலும் அதிகப்படுத்த வேண்டியதுள்ளது. போக்குவரத்தின் தரம் மேலும் உயர்த்தப்பட வேண்டும். ஏர் இந்தியா நிறுவனமும், இந்தியன் ஏர்லைன்ஸ் நிறுவனமும், பயணிகளுக்கான சேவைகளை நல்ல முறையில் ஒழுங்குபடுத்த வேண்டும். பயணசீட்டுகளை முன்பதிவு செய்தல், உறுதிப் படுத்துதல், ரத்து செய்தல்



ஆகியவற்றில் பன்னாட்டுத்தரத்தை எட்டவேண்டும். வயுதூத் சேவைகள் மேலும் நீட்டிக்கப்படவேண்டும். ரயில்வே போக்குவரத்தில் வேகத்தை தவிர மற்றவை பரவாயில்லை என்று கூறலாம்.

வேகத்தில் பிறநாட்டு ரயில் போக்குவரத்தில் அதிக முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. 1989-ல் பிரான்ஸ் மணிக்கு 300 கிலோமீட்டர் வேகம் செல்லும் ரயிலை அறிமுகப்படுத்தியது. ஜெர்மனியில் 1901-லிருந்து எல்லா ரயில்களுமே சராசரி 250 கி.மீ. வேகத்தில் செல்கின்றன. ஸ்பெயின் 1992-ல் மணிக்கு 450 கி.மீ. வேகம் செல்லும் ரயிலை அறிமுகப்படுத்தியது. இந்தியாவில் சமீப காலம் வரை ராஜதானி மற்றும் தாஜ் 'அதிவேக ரயில்கள்' மணிக்கு 110 கி.மீ. வேகத்தில் தான் செல்கின்றன. தற்போது சாதப்தி எக்ஸ்பிரஸ் (Shatabdi Express) ரயில் மணிக்கு 140 கி.மீ. செல்கிறது. வெளிநாட்டு பயணிகளுக்காக 7 நாட்களிலிருந்து 90 நாட்கள் வரை சலுகை கட்டணத்தின் மூலம் ரயில்வே பாஸ் (train pass) வழங்கப்படுகிறது. இந்த பாஸ் வைத்திருப்பவர் எந்த சுற்றுலா மையங்களுக்கும் எத்தனை தடவை வேண்டுமானாலும் சென்று வரலாம்.

வெளிநாட்டுப் பயணிகளுக்கு இந்திய ரயில்வே நிர்வாகம் ஜெய்ப்பூருக்கும் டெல்லிக்கும் இடையே விட்டுள்ள 'Palace on wheels' என்ற சிறப்புரயில் பயணிகளை மிகவும் கவர்வதாக உள்ளது. மேலும் கல்கத்தா-கயா-வாரனாசி-கோரக்பூர் பகுதிகளுக்கிடையே விடப்பட்டுள்ளன. 'Hotel on wheels' என்ற ரயில் புத்த சுற்றுலா பயணிகளை மிகவும் கவர்ந்துள்ளது. குஜரத்தில் 'Orient express' என்ற ரயில் சுற்றுலா பயணிகளை வெகுவாகக் கவர்ந்துள்ளது

### சாலைவழிப் போக்குவரத்து Road ways :

சுற்றுலாப் பயணிகளுக்கான போக்குவரத்தில் சாலை வழிப் போக்கு வரத்தே சிறப்பிடம் வகிக்கிறது. சுற்றுலா பணிகளை விமான நிலையங்களுக்கு கொண்டு போய் விடுவதற்கும், அங்கிருந்து கூட்டிவருவதற்கும், அதே போல ரயில் நிலையங்களிலிருந்து அழைத்து வரவும் சாலை வழியே பிரதானமாக போக்குவரத்துக்குப் பயன்படுகிறது. சுற்றுலா வளர்ச்சிக்கு சாலை வழிப் போக்கு வரத்தே முக்கியமான இடம் வகிக்கிறது என்பதில் ஐயமில்லை.

சுற்றுலாப் பயணிக்ளின் போக்குவரத்து பற்றிய ஓர் ஆய்வை மேற்கொண்டபோது 80 சதவீத உள்நாட்டுப் பயணிகளும் 50 சதவீத வெளிநாட்டுப் பயணிகளிலும் சாலைவழி போக்குவரத்தையே அதிகமாக விரும்புவதாகத் தெரிய வந்துள்ளது. அதில் பேருந்து மற்றும் சிறப்பு பேருந்து களையே விரும்புகின்றனர். இதற்கு முக்கியக் காரணம் பேருந்துகள் அதிக அளவிலும் அடிக்கடி கிடைப்பதும், அதன் கட்டணம் குறைவாக இருப்பதும், போகும் வழிகளில் இயற்கை காட்சிகளை மெதுவாக ரசித்துச் செல்வதற்கு வசதி

யிருப்பதுமேயாகும். சொகுசுப் பேருந்துகள், குளிரூட்டப்பட்ட கார்கள் மற்றும் வேன்கள் சுற்றுலாப் பயணிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றன.

இந்திய அரசு சுற்றுலா பயணிகளின் போக்குவரத்தில் அதிக கவனம் செலுத்தியுள்ளது. 'இந்திய சுற்றுலா வளர்ச்சி நிறுவனம்' பல சொகுசுப் பேருந்து களை இயக்கி வருவது குறிப்பிடத்தக்கது. தமிழ் நாட்டிலும், கர்நாடகத்திலும் இவ்வித பேருந்துகள் சுற்றுலா பயணிகளை வெகுவாகக் கவர்ந்துள்ளன. இவை தவிர இந்தியாவில் மூன்று இடங்களில் 'ஒரு கார் வாடகைக்கு எடுத்துக் கொள்ளுங்கள்' (rent a car services) என்ற மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவை 1990 அக்டோபர் மாதம் வரை 15 நகரங்களில் சுமார் 1000 கார்களைக் கொண்டு செயல்பட்டு வருகின்றன.

## நீர்வழிப் போக்குவரத்து : Water ways

சுற்றுலாவைப் பொறுத்த அளவில் நீர்வழிப் போக்குவரத்தானது இன்னும் வளர்ச்சியடையாத நிலையிலேயே இருந்து வருகிறது. இந்தியாவைப் பொருத்த அளவில் இந்தியாவிற்கும் வளைகுடா நாடுகளுக்குமிடையே மற்றும் பம்பாய்க்கும் கோவாவிற்குமிடையே கடல்வழிப் போக்குவரத்து உள்ளது. தரை வழிமார்க்கமாக சென்று போரடித்துப்போன சுற்றுலாப்பயணிகளுக்கு ஒரு மாற்றத்திற்காக நீர்வழிப்போக்குவரத்து சுற்றுலாப் பயணிகளால் அதிகமாக விரும்பப்படுகிறது. இதற்காகவே பல சொகுசுக் கப்பல்கள் கட்டப்பட்டுள்ளன.

சுற்றுலாவில் இந்த போக்குவரத்து தான் முக்கியமான அடிப்படைக் கூறாகக் கருதப்படுகிறது. ஏனென்றால் ஒரு சுற்றுலாப் பயணி தனது சுற்றுலா பயணத்தின் அதிகமான நேரத்தை போக்குவரத்திலேயே செலவிடுகிறார். எனவே இதில் மனித உறவுகள் முக்கிய பங்கு வகிக்கின்றது. பேருந்து, மற்றும் வாடகைக் கார் ஓட்டுநர்கள் தங்கள் வாகனங்களில் பயணம் செய்யும் பயணி களிடம் அன்பாகவும் நல்ல முறையிலும் நடந்து கொள்ள வேண்டும். பொதுவாக சுற்றுலா பயணிகளுக்கு தாங்கள் செல்லும் இடங்கள், மொழி ஆகியவை முற்றிலும் புதியனவாக இருப்பதால் அவர்களை ஏமாற்றுவதற்கு வழி உண்டு. ஆனால் நாட்டின் பெருமை கருதியும், முக்கியமாக சுற்றுலாவின் வளர்ச்சி கருதியும் சுற்றுலாப் பயணிகளுக்கு எவ்வித அசம்பாவித சம்பவங்களும் ஏற்பட்டுவிடாதபடி பாதுகாப்பது அவசியமாகிறது.

## II) தங்கும் இடங்கள்
### (ACCOMMODATION)

சுற்றுலாவின் அடுத்த முக்கியமான உறுப்பு 'தங்கும் இடம்' ஆகும். சுற்றுலாப் பயணிகளுக்குத் தரமான தங்கும் வசதி செய்து கொடுப்பதின் அடிப்படையில்தான் சுற்றுலாவின் வளர்ச்சியே அமைந்துள்ளது. உண்ண, உடுக்க,



ஓய்வெடுக்க தக்கவசதிகள் நிறைந்த தங்கும் விடுதிகளும் உணவகங்களும் இருத்தல் அவசியமாகிறது. தங்குமிடங்களில்தான் சுற்றுலாப் பயணிகள் பயணத்தை முடித்துக் கொண்டு ஒரு விருந்தாளியாக மாறிவிடுகிறார்கள் (Accommodation facilities are the places where tourists stop travelling and become guests). இந்த விருந்தாளிகளின் திருப்தியில் தான் சுற்றுலாவின் வளர்ச்சியே அமைந்துள்ளது.

நாள் முழுவதும் பயணங்களை மேற்கொண்டபின் ஓய்வு எடுப்பதற்கும் மறுநாள் பயணத்திற்காகத் தன்னைத் தயார் படுத்திக் கொள்வதற்கும் ஒரு பயணிக்கு தங்கும் வசதி அத்யாவசியத் தேவையாகிறது. இரவில் நன்றாக தூங்குவது மிகவும் அவசியமாகிறது. தங்கும் வசதிக்கான சுற்றுலாப் பயணிகளின் எதிர்பார்ப்புகள் பலதரப்பட்டது ஆகும். எனவே உலகின் பல பாகங்களிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கு தேவையான சொகுசான தங்குமிடங்கள் அல்லது விடுதிகள் சுற்றுலாமையத்தில் இருக்க வேண்டும். சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை பெருக, பெருக விடுதிகளின் எண்ணிக்கைகளையும் வசதிகளையும் விரிவுபடுத்த வேண்டிய அவசியம் ஏற்படுகின்றன. இத்தகைய விடுதிகளின் அமைப்பும் வசதிகளும் நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றன.

தங்குமிடத்தை நாம் விடுதிகள் (Hotels) என்றும் கூடுதல் தங்குமிடங்கள் என்றும் (Supplementary Accomodation) என்றும் இருவகைப்படுத்தலாம். விடுதிகள் பல வகைப்படும். இதனைப்போன்று கூடுதல் தங்குமிடங்களிலும் சேவை, அமைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் பல பிரிவுகள் காணப்படு கின்றன. எனவே சுற்றுலா முன்னேற்றத்திற்கு தங்கும் இடங்கள் மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது. சுற்றுலா வளர்ச்சியின் முதுகெலும்பு இருப்பிட வசதியேயாகும். சுற்றுலாமையம் எவ்வளவு பெருமையும் சிறப்பும் கவர்ச்சியும் பெற்றிருப்பினும் அங்கு உண்ண மற்றும் தங்குவதற்கு தக்க வசதிகள் இல்லையென்றால் அச்சுற்றுலா மையத்திற்குப் பயணிகள் வரத்தயங்குவர். எனவே சுற்றுலா மையம் சிறப்படைய வேண்டுமென்றால் அந்த இடத்தில் தங்கும் வசதிகள் இருத்தலுடன் அவை வசதிகள் நிறைந்ததாக இருத்தலும் அவசியமாகிறது. 'Accommodation is a home away from home'.

## தங்கும் விடுதிகளின் வரலாறு :

ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குப் பயணம் செய்யும் சுற்றுலாப் பயணி தனது இருப்பிடத்திற்கு உடனடியாகத் திரும்ப முடியாது. எனவே இரவைக் கழிக்க அவர் ஓரிடத்தில் தங்க வேண்டியதிருந்தது. பண்டைக்காலங் களில் பயணிகளும் வழிப்போக்கர்களும் தங்குவதற்கு சத்திரங்கள் அமைக்கப் பட்டிருந்தன. அங்கே அவர்கள் திருடர் பயமின்றி தமது உடமைகளைப்

இலவசமாகப்
பாதுகாப்பாக வைத்துக்கொண்டனர். உணவும் தங்குமிடமும்
பெற்றனர். ரோமானிய நாட்டில் இதனைப்போன்ற சத்திரங்கள் பல இருந்தன.
இதன்பிறகு மத்திய காலத்தில் திருச்சபை வழிப்போக்கர்களுக்குத் தங்கும்
வசதிகளை அளித்தன. பெரும்பாலும் சமயத்தைப் பரப்பும் நோக்குடன் பயணம்
செய்த கிறிஸ்தவப் பாதிரிமார்கள் இங்கே தங்கினர். பதினைந்தாம் நூற்றாண்டில்
இங்கிலாந்து பிரான்ஸ் போன்ற ஐரோப்பிய நாடுகளில் அதிகமான விடுதிகள்
அமைக்கப்பட்டன. சில விடுதிகளில் முப்பதுக்கும் மேற்பட்ட அறைகள்
இருந்தன. விடுதிகளின் உரிமையாளர் பயணிகளிடமிருந்து ஒரு குறிப்பிட்ட
தொகையை, உணவு தங்குமிடம் அளித்தமைக்காக வசூலிப்பர்.

இங்கிலாந்தில் இந்த வகையான விடுதிகளின் (inn) சமுதாயப் பொறுப்புகள் விரிவாக்கப்பட்டன. அமெரிக்காவில் இந்த மாதிரியான தங்கும் விடுதிகள் (Tavern) மிகவும் புகழ் பெற்று விளங்கின.

இந்தியாவிலும் பழங்காலம் தொட்டே பயணிகளும், வழிப்போக்கர்களும் தங்குவதற்கென்று தர்மசத்திரங்கள், விகாரைகள், சாராய்கள், தர்மசாலைகள் போன்றவைகள் இருந்ததாக அறிகிறோம். இந்த தங்குமிடங்களில் அவர்களுக்கு உணவும், நீரும் இருப்பிடமும் அளிக்கப்பட்டன. யாத்ரிகர்கள், வணிகர்கள், கல்வியாளர்கள், வீரர்கள் ஆகியோர் இவற்றில் தங்கினர். இந்தியாவில் இந்த விகாரைகள் (Viharas) தான் முதலாவது தங்குமிடங்கள் என்று கருதலாம். தர்மசத்திரங்கள் பெரும்பாலும் வணிக வழித் தடங்களிலும், புனிதத் தலங்களுக்குச் செல்லும் இடங்களிலும் அமைந்திருந்தன. பல மன்னர்களும் நவாப்புகளும் சத்திரங்களைப் பராமரித்து வந்ததாக அறிகிறோம்.

## தங்கும் விடுதிகளின் வகைகள் (Types of Hotel Accommodation):

சுற்றுலாப் பயணிகள் தங்கும் விடுதிகளை கீழ்க்கண்டவாறு வகைப் படுத்தலாம்.

### a) நட்சத்திர விடுதிகள் (Star Hotels) :

நவீன உலகின் கவர்ச்சிக் கன்னி நட்சத்திர விடுதிகள் ஆகும். இவை மேல் நாட்டுப் பாணியில் உருவான ஆடம்பரமிக்க ஆரவாரமான விடுதிகள். இந்த நட்சத்திர விடுதிகள் 'பன்னாட்டு விடுதிகள்' (International Hotels) என்றும் அழைக்கப்படுகிறது. இந்த நட்சத்திர விடுதிகள் நாட்டின் தலைநகரங்களிலும் புகழ்பெற்ற சுற்றுலா மையங்களிலும் கட்டப்பட்டுள்ளன. இவைகளில் பல ரகங்கள் உள்ளன. ஒன்று முதல் ஐந்து நட்சத்திரம் வரை வசதிக்கு ஏற்ற வகையில் இவற்றின் தரம் மாறுபடுகிறது. இவற்றுள் ஐந்து நட்சத்திர ஹோட்டல்களே அனைத்து வசதிகளையும் கொண்டவை இந்த நட்சத்திர விடுதிகள்



அயல்நாட்டுப் பயணிகளைக் கவர்ந்திழுத்து நம் நாட்டிற்கு வருவாயைத் தேடித் தருகின்றன. எனவே நட்சத்திர விடுதிகள் சுற்றுலா வளர்ச்சியின் உயிர் மூச்சாக திகழ்கிறது.

## ஐந்து நட்சத்திர ஆடம்பர விடுதிகளில் இருக்க வேண்டிய வசதிகள்:

a) முகப்புத் தோற்றம் கவர்ச்சியாகவும் கட்டிட அமைப்பு வசதியாகவும் இருக்கவேண்டும். பெரிய அறை, தனி அறை ஆகியவை குளுகுளு வசதி நிரம்பியனவாக இருத்தல்வேண்டும். இருவர் தங்கும் அறை 60 சதுர மீட்டரும், ஒருவர் தங்கும் அறை 55 சதுரமீட்டரும் இருக்கவேண்டும். அறையிலுள்ள தரையில் தரமான விரிப்புகள் சதுரமீட்டரும் விரிக்கப்பட்டிருக்க வேண்டும். ஜன்னல் மற்றும் கதவு திரைச் சீலைகள் உயர்ந்த ரகத் துணிகளாக இருத்தல் வேண்டும். விடுதிகளில் குறைந்தது 25 படுக்கையறைகள் இருக்கவேண்டும். ஷவர்பாத் வசதிகொண்ட குளியல் அறை, அவற்றில் இருபத்தி நான்கு மணிநேரமும் தண்ணீரும், வெந்நீரும் வரவேண்டும்.

b) விடுதியின் சுற்றுப்புறசூழல் சிறப்பாக அமைந்திருக்க வேண்டும். கார்கள் ஸ்கூட்டர்கள் நிறுத்த தனியிடம் இருக்க வேண்டும். ஹோட்டல் குறைந்தது இரண்டு மாடிக் கட்டிடமாக இருக்கவேண்டும். நாள்முழுக்க இயங்கும் லிப்ட் (lift) வசதி இருக்க வேண்டும். இது தவிர நல்ல வடிவமைப்புக் கொண்ட நீச்சல்குளம் இருக்கவேண்டும்.

c) விடுதி அறைகள் சிறந்த கலைஞர்களைக் கொண்டு அழகுபடுத்தப் பட்டிருக்க வேண்டும். மேலும் அறைகளில் போன், வானொலி, தொலைக் காட்சி வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். இருபத்திநான்கு மணி நேரமும் வேலைக்காரப் பையனின் சேவை கிடைக்க வேண்டும். பல மொழிகள் பேசத்தெரிந்த பெண் வரவேற்பாளர் வரவேற்பறையில் அமர்ந்திருக்க வேண்டும். வரவேற்பறை இருபத்தி நான்கு மணி நேரமும் திறந்திருக்க வேண்டும்.

d) இவைதவிர ஹோட்டல் வளாகத்தில் வங்கி, உணவகம், மது அருந்தகம் (Bar), பெரிய அரங்குகள், பூங்கா, புத்தகக்கடை, மருந்துக்கடை, அழகு நிலையங்கள், உடற்பயிற்சி நிலையம், சலூன், லாண்டரிக்கடை, டெலக்ஸ் வசதி, செய்தித்தொடர்பு அலுவலகம், வெளிநாட்டுப் பணம் மாற்றுமிடம், நடன வசதியுடன் கூடிய உணவகம், பயிற்சியும் அனுபவமும் மிக்க கல்வியற்ற பணியாளர் போன்ற வசதிகள் இருத்தல்வேண்டும்.

## இந்தியாவில் நட்சத்திர விடுதிகள் (Star Hotels in India) :

இந்திய அரசின் சுற்றுலாத் துறையினரால் நியமிக்கப்பட்டுள்ள நட்சத்திர ஆய்வுக்குழு (Star classification committee) ஒவ்வொரு மாநிலத்திலும் செயல்

பட்டு வருகிறது நட்சத்திரத் தகுதி பெற விரும்பும் ஹோட்டல்காரர்கள் இந்த ஆய்வுக்குழுவிடம் விண்ணப்பிக்க வேண்டும் இந்த குழு அந்த ஹோட்டல்களைப் பார்வையிட்டு சேவை மற்றும் வசதி அடிப்படையில் ஒரு நட்சத்திர விடுதி, இரண்டு நட்சத்திர விடுதி, மூன்று நான்கு, ஐந்து நட்சத்திர விடுதி என்ற தகுதியை வழங்கும் இந்த நட்சத்திர ஆய்வுக்குழு மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை நட்சத்திர விடுதிகளைப் பார்வையிட்டு அவற்றின் செயல்பாடுகள் குறித்து ஆராயும்.

## இந்தியாவின் முன்னணி நட்சத்திர விடுதிகள் :

இந்தியாவில் முன்னணியில் உள்ள நட்சத்திர குருப் ஹோட்டல்கள் வருமாறு அசோக்குருப், ஒபிராய் குருப், தாஜ்குருப், வெல்கம் குருப், கிளார்க்ஸ் குருப், டிரவெட்டல் குருப் (Ashok group, Operoi group, Taj group, Welcome group, Clarks group, Travotel group) ஆகியவை முன்னணி இடம் வகிக்கின்றன.

அசோக் குருப் ஹோட்டல்கள் இந்தியா சுற்றுலாத் துறை வளர்ச்சிக் கழகத்தால் (ITDC) நடத்தப்பட்டு வருகிறது. இந்தியா முழுவதும் முக்கியமான நகர்களில் ஹோட்டல்கள் கட்டியுள்ளது. உலகில் 35 இடங்களில் சுமார் 40 ஹோட்டல்களை கட்டியுள்ளது. அவைகளில் மொத்தம் 4,500 அறைகள் உள்ளன.

ஒபிராய் குருப் ஹோட்டல்கள் இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் உள்ளது. உலகின் மிகச் சிறந்த 300 விடுதிகளில் இந்த ஒபிராய் ஒட்டலும் ஒன்று இந்த ஹோட்டல் M.S. ஒபிராய் என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது 9 ஒன்பது நாடுகளில் 30 ஹோட்டல்கள் செயல்பட்டு வருகின்றன. முக்கியமாக நேபாளம், இலங்கை, ஆஸ்திரேலியா, சவுதி அரேபியா, எகிப்து, ஈராக், இந்தோனேஷியா ஆகிய நாடுகளில் ஒபிராய் நட்சத்திர விடுதிகள் செயல்பட்டு வருகின்றன.

1903-ம் வருடம் 'இந்திய ஹோட்டல் கம்பெனி' என்ற நிறுவனத்தால் ஆரம்பிக்கப்பட்டது தான் தாஜ்குருப் ஹோட்டல்கள். முதல் ஹோட்டல் தாஜ்மஹால் ஹோட்டல் ஆகும். தற்போது இந்தியாவில் (1983-ல்) 17 ஹோட்டல்களும், வடக்கு ஏமன், லண்டன், நியுயார்க், கொழும்பு, மாலத்தீவு உட்பட பல வெளிநாடுகளில் 11 ஹோட்டல்களும் செயல்பட்டு வருகின்றன.

இந்தியாவில் மிக வேகமாக வளர்ந்து வரும் ஹோட்டல் வெல்கம் குருப் ஹோட்டல்கள் ஆகும். இந்திய தேயிலைக் கம்பெனியின் (ITC) ஒரு பிரிவே இந்த ஹோட்டல்கள் ஆகும். இந்தியாவில் சென்னையில் சோழா ஹோட்டலும், டில்லியில் மவுரியா ஹோட்டலும், ஆக்ராவில் முகல்ஸ் ஹோட்டலும், வெல்கம் குருப் ஹோட்டல்கள் ஆகும்.



இவை தவிர கிளார்க்ஸ் குருப் ஹோட்டல்கள் வாரணாசி, ஆக்ரா, ஜெய்ப்பூர், லக்னோ ஆகிய இடங்களில் நடத்தி வருகிறது. டிரவெட்டல் குருப் ஹோட்டல்கள் கோரக்பூர், போர்ட்பிளேர் ஆகிய இடங்களில் உள்ளது.

ஒவ்வொரு வருடமும் இந்திய சுற்றுலா அமைச்சகம் சிறப்பாக செயல்படும் நட்சத்திர விடுதிகளுக்கு விருதுகள் வழங்கி வருகிறது. இந்த விடுதிகளின் செயல்பாடுகள், சேவை, மற்றும் வசதிகள் ஆகியவற்றை மதிப்பிட்டு விருதுகள் வழங்கப்படுகிறது. 1999-ம் வருடத்திற்கான விருதுகளை தாஜ்குருப் விடுதிகள் தட்டி சென்றன. தேசிய அளவிலான விடுதிக்கான விருதை உதய்பூரிலுள்ள 'லேக் பேலஸ் ஐந்து நட்சத்திர விடுதியும்' (Lake Palace Hotel), பாரம்பரிய பழைய அம்சங்கள் கொண்ட விடுதிகளுக்கான விருதை மதுரை தாஜ கார்டன் ரிட்ரீட், சென்னை தாஜ் கோரமண்டல் விடுதியும், பிஷர்மேன் கோவ் (Fisherman's Cove) விடுதியும் பெற்றன. கிழக்குப் பகுதிகளுக்கான விருது கல்கத்தாவிலுள்ள ஐந்து நட்சத்திர விடுதியான 'தாஜ பெங்கால் ஹோட்டல்' (Taj Bengal Hotel) என்ற விடுதிக்குக் கிடைத்தது.

### b) பாரம்பரிய தன்மை கொண்ட விடுதிகள் : Heritage Hotels

தற்போது பாரம்பரியத்தன்மைகளைக் கொண்ட விடுதிகள் என்று புதிய முறையில் விடுதிகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. தேசியப் பாரம்பரிய அம்சங்களைக் கொண்ட அரண்மனைகள், மாளிகைகள், கோட்டைகள் போன்றவைகள் விடுதிகளாக மாற்றப்பட்டு இவ்வாறு வகைப்படுத்தப்படுகிறது. இந்தியாவில் இவ்வகையிலான விடுதிகள் 1950-ம் ஆண்டுக்கு முன்பு கட்டப்பட்டவைகளாக இருக்க வேண்டும். இவ்வகைக் கட்டிடங்கள் பாரம்பரிய அமைப்புகளைக் கொண்டும் முற்கால வாழ்க்கை முறைகளை வெளிப்படுத்தும் கலை அம்சங்கள் கொண்டவையாக இருக்க வேண்டும். இவை நமது பாரம்பரியத்தின் மைல்கற்களாக விளங்குகின்றன. இந்த வகையான விடுதிகள் தற்போது சுற்றுலாப் பயணிகளை அதிகமாகக் கவர்ந்து வருகின்றன. இந்தியாவில் மொத்தம் 64 பாரம்பரிய தன்மை கொண்ட விடுதிகள் உள்ளன. அவைகளில் மொத்தம் 1655 அறைகள் உள்ளன.

### c) பொழுதுபோக்கு விடுதிகள் (Resort Hotels) :

இவை பொதுவாக சுற்றுலாப் பயணிகள் பொழுதுபோக்கும் இடங்களில் அமைந்திருக்கின்றன. விடுமுறையைக் கழிக்க விரும்புவோர் உடல் நலம் பேணுவதற்கு ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்பவர்கள், சுற்றுலாப் பயணிகள் ஆகியோர் இந்த பொழுதுபோக்கு விடுதிகளை நாடுகின்றனர். இந்த விடுதிகள் பொதுவாக இயற்கையெழில் கொஞ்சும் ஏரி, கடல், மலை, காடு, பூங்கா ஆகிய இடங்களிலேயே அமைக்கப்படுகின்றன. இந்த விடுதிகளில்

பெரும்பாலும் உள்ளரங்க விளையாட்டுகளே (Indoor games) நடைபெறும். எடுத்துக்காட்டாக டென்னிஸ், நீச்சல் போட்டி, பனிச் சறுக்கு, நீர்ச்சறுக்கு, கோல்ஃப் ஆகிய விளையாட்டுகளே நடைபெறும். இங்கே மீன் பிடித்தலும் ஒரு பொழுதுபோக்கு ஆகும். இந்த விடுதி வளாகத்தில் அரங்குகள் இருக்கும். அதில் ஆடல் பாடல் நடைபெறும்.

இந்த பொழுதுபோக்கு விடுதிகள் பல வகையாகப் பிரிக்கப்படுகின்றன. அவை, கோடைகால விடுதிகள், மலைவாழ் விடுதிகள், கடற்கரை வாழ் விடுதிகள் ஆகியவையாகும். இவை அந்தந்த பருவ காலங்களில் (season) அதிகமான பயணிகளை ஈர்க்கிறது. பருவகாலம் முடிந்த பின்பு பயணிகள் அதிகமாகச் செல்வதில்லை. ஆனால் இதற்காக சமீப காலங்களில் மாற்று ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. சாதாரண காலங்களில் குறைந்த வாடகைக்கு விடுவது, கேளிக்கைகளுக்கு மிகக் குறைந்த கட்டணம் வசூலிப்பது, கண்காட்சி நடத்துவது ஆகியவற்றின் மூலம் இவ்விடுதிகளின் வருமானம் ஓரளவு நிறைவுபடுத்தப் படுகிறது. இந்தியாவில் ஸ்ரீநகர், டார்ஜிலிங், ஊட்டி, சிம்லா, கோவளம் ஆகிய இடங்களில் இத்தகைய விடுதிகள் உள்ளன.

### d) வணிக விடுதிகள் (Commercial Hotels) :

வணிகர்களின் நலன் கருதியே அமைக்கப்படும் விடுதிகளுக்கு வணிக விடுதிகள் என்று பெயர். இங்கு பெரும்பாலும் தங்கள் வியாபார நிமித்தமாக வரும் வணிகர்களே தங்குவர். குழுப்பயணியர்களைக் கவரும் நட்சத்திர விடுதிகள் பொழுதுபோக்கு விடுதிகள் போலல்லாது தனிப்பயணியரை கவரும் விதத்திலேயே இந்த வணிக விடுதிகள் செயல்படுகின்றன. இந்த விடுதிகள் பெரும்பாலும் வாணிக, தொழிற்துறை நகரங்களிலேயே அமைக்கப்படுகின்றன. இவைகளில் உணவகமும், கார் நிறுத்துவதற்கான வசதியும் அமைந்திருக்கும். உணவகப்பணியாளர் வாடிக்கையாளர்களை நன்கு உபசரித்து அனைத்து வசதிகளையும் செய்து தருவர். நம்பிக்கை, நாணயம், பணிவிடை ஆகியவையே இத்தகைய உணவகங்களின் சிறப்பம்சமாகும். மேலும் இந்த விடுதிகளில் செலவும் குறைவாகவே உள்ளது.

சில விடுதிகளில் பலர் சேர்ந்து தூங்குவதற்கான தூங்கும் அறைகளும் (Dormitories) உள்ளது. மேலும் இரவு நேரத்தை மட்டும் கழிப்பதற்கு என்று பொதுப்படுக்கை அறை வசதிகளும் உள்ளன. இந்தப் படுக்கை பெரிய அறையில் வரிசையாகப் போடப்பட்டிருக்கும். இவை குறைந்த கட்டணத்தில் கிடைக்கும். எனவே சிறு வியாபாரிகள் இதனையே அதிகம் விரும்புகின்றனர்.

### e) தங்கல் விடுதிகள் (Residential Hotels):

தங்கல் விடுதிகளை 'அடுக்கறை விடுதிகள்' (Apartments) என்று அழைக்கலாம். இதில் அடுக்கடுக்காக அறைகள் இருக்கும். தங்குமிடம் மட்டுமே இங்கே அளிக்கப்படும். உணவு வசதி இங்கே கிடைப்பதில்லை. இங்கே அறைகள் மாத வாடகைக்கு கிடைக்கும். மேலும் அரையாண்டு மற்றும் வருடா வாடகைக்கும் கிடைக்கும். இங்கே வாடகை குறைவாகவே வசூலிக்கப்படுகிறது. ஆயினும் வசதிகளும் சேவைகளும் அதிகம். பெரிய நகரங்களிலேயே அமைக்கப்பட்டிருக்கும். இந்த தங்கல் விடுதிகள் ஐரோப்பிய பாணியில் அமைக்கப்பட்டுள்ளன. அமெரிக்காவில் இந்த வகை ஹோட்டல்கள் அதிகம் தோன்றியுள்ளன. நிரந்தரமாக ஹோட்டலில் தங்குவதால் கிடைக்கும் அனுகூலங்களைக் கருதி அநேகம் பேர் இவ்வகை ஓட்டல்களில் தங்குகின்றனர். ஐரோப்பிய நாடுகளிலும், அமெரிக்காவிலும் இவ்வகை விடுதிகளுக்கு Pensions என்று பெயர்.



### f) மிதக்கும் விடுதிகள் (Floating Hotels):

தண்ணீருக்கு நடுவில் கட்டப்படும் விடுதிகள் மிதக்கும் விடுதிகள் என்று அழைக்கப்படுகிறது. ஏரி, குளம், ஆறு, கடல் ஆகியவற்றின் நடுவில் இவை கட்டப்பட்டுள்ளன. மற்ற விடுதிகள் போன்றே இங்கு எல்லா வசதிகளும் உண்டு. இந்த மிதக்கும் விடுதிகள் வெளி நாடுகளில் பயணிகளால் மிகவும் விரும்பப் படுகிறது. சில நாடுகளில் பழுதுபட்ட கப்பல்களை விடுதிகளாக மாற்றியுள்ளனர். இவ்வகை விடுதிகளில் தங்குவது பயணிகளுக்கு புதுமையான முற்றிலும் வித்தியாசமான அனுபவமாக இருக்கும். எனவேதான் மேல்நாட்டு சுற்றுலா பயணிகள் இவ்வகை விடுதிகளை மிகவும் விரும்புகின்றனர். காஷ்மீரில் இவ்வகை விடுதிகள் உள்ளன. இவை படகு வீடுகள் என்று அழைக்கப்படுகின்றன. இவைகளுள் காஷ்மீரில் வெல்கம் குருப் ஹோட்டல் பிரிவினர் டால் ஏரியில் அமைந்துள்ள ஏரிப்படகு வீடுகள் குறிப்பிடத்தக்கவையாகும்.

## துணைத் தங்குமிடங்கள்
## (SUPPLEMENTARY ACCOMMODATION)

துணைத்தங்குமிடங்களும் சுற்றுலாவின் ஒரு உறுப்பாகவே கருதப் படுகிறது. இவைகளும், விடுதிகளைப் போன்ற ஒரு அமைப்புதான். இதில் சுற்றுலாப் பயணிகளுக்கு பண ஆதாயம் அதிகமாக இருப்பதாலும் வாடகை குறைவாக இருப்பதாலும் இதனைப் போன்ற அமைப்புகள் அயல்நாடுகளில் மிகவும் செல்வாக்குப் பெற்று விளங்குகின்றன. இந்த அமைப்புகள் எல்லா சுற்றுலாப் பயணிகளுக்கும் தங்குமிடம், உணவு ஆகிய வசதிகளைச் செய்து தருகின்றன. வசதிகளைப் பொறுத்தமட்டில் விடுதிகளைவிடச் சற்று குறைவானது தான். ஆனால் இந்த துணைத் தங்குமிடங்களில் வேறு சில ஆதாயங்களும் உண்டு.

இங்கு கட்டுப்பாடுகள் குறைவு, சுதந்திரம் அதிகம். விளையாட்டுகள், கேளிக்கைகள், பொழுதுபோக்குகள், அதிக அளவில் பயணிகளுக்கு இவை

வழங்குகின்றன. இதனால் இதில் தங்குவோர்களிடம் நல்ல பழக்கத்தையும் அறிமுகத்தையும், தோழமை உணர்வையும், நெருக்கத்தையும் ஏற்படுத்து கின்றன. எனவேதான் பிரான்ஸ், இத்தாலி முதலான நாடுகளில் பயணிகள் இது போன்ற கூடுதல் தங்கும் விடுதிகளில் தங்க விரும்புகின்றனர். விடுதிகளுக்கு இணையான வசதிகளை வழங்கும் இவை உள்நாட்டு பயணிகளின் தேவைகளை யும், வெளிநாட்டுப் பயணிகளின் தேவைகளையும் நிறைவு செய்கின்றன.

துணைத் தங்கும் இடங்களை கீழ்க்கண்டவாறு பிரிக்கலாம்.

## a) யாத்ரி நிவாஸ் மற்றும் தர்மசாலைகள் :

(Yatri Nivas and Dharmasalas)

யாத்திரிகர்கள் அதிகமாகச் செல்லும் சமய முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் யாத்ரிநிவாஸ் அமைக்கப்பட்டுள்ளது. நமது நாட்டில் அனேக புனித தலங்களில் இந்த வகை விடுதிகள் அமைக்கப்பட்டுள்ளன. பயணிகளுக்கு தங்குமிடமும், சில சமயம் உணவும் முற்றிலும் இலவசமாக வழங்கும் இடமே தர்மசாலைகள் ஆகும். மிகவும் வசதி படைத்த தொழிலதிபர்கள், இரக்க சிந்தனை யுடையவர்கள் ஆகியோர் வழங்கும் தர்மத்தை அடிப்படையாகக் கொண்டே இவ்வகை தர்மசாலைகள் அமைக்கப்படுகின்றன. இது மிகவும் சொற்ப வருமானமுடைய பயணிகளுக்கு மிகவும் பயன்படுகிறது.

## b) மோட்டல்கள் (Motels) (சாலை ஓர உணவகங்கள்)

நகரங்களுக்கு அப்பால் சாலையின் ஓரத்தில் அமைக்கப்பட்டுள்ள விடுதிகளே மோட்டல்கள் எனப்படுகிறது. உலகின் பல நாடுகளில் தற்போது இந்த வகை மோட்டல்கள் புகழ் பெற்று வருகிறது. நெடுந்தூர சாலைவழிப் பயணம் மேற்கொள்பவர்களுக்கு இந்த மோட்டல்கள் ஒரு பெரும் வரப்பிரசாதம் ஆகும். நெடுந்தூரப் பயணம் செய்வோர் பயணத்தின் நடுவே சற்று ஓய்வு எடுக்கவும், உண்ணவும் இந்த மோட்டல்கள் பயன்படுகின்றன. இவை பொதுவாக மனித நடமாட்டம் அதிகமில்லாத இடங்களிலேயே அமைக்கப் படுகின்றன. பெரிய மோட்டல்களில் பெட்ரோல் பங்குகள், கார் பழுதுபார்த்தல், உதிரிபாகங்கள் விற்பனை ஆகிய வசதிகளும் உண்டு. பொதுவாக இரவு நேரங்களிலேயே இந்த மோட்டல்களில் கூட்டம் அதிகமாக இருக்கும். இங்கே சிற்றுண்டி சாலைகளும் மற்ற தேவைகளுக்கேற்ப பொருட்களும் உண்டு. சென்னை-திருச்சி நெடுஞ்சாலையில் பல மோட்டல்களை நாம் காணலாம்.

அமெரிக்காவில் விடுதிகளும் இந்த மோட்டல்களும் சம அந்தஸ்தைப் பெற்றுள்ளன. நார்வே, பிரான்ஸ், அயர்லாந்து போன்ற நாடுகளில் மோட்டல்கள் அமைப்பதற்கென்று தனிச் சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. இவ்வகை விடுதிகளைக் கட்டுவதற்கு அரசிடம் முன்அனுமதி பெறவேண்டும். மோட்டல்களில் அரசு கூறும் வசதிகள் இருக்க வேண்டும்.



## c) இளைஞர் விடுதிகள் (Youth Hostels) :

தனியாக சுற்றுலா செல்பவர்களுக்கும், குழுச் சுற்றுலா செல்பவர் களுக்கும் இளைஞர் விடுதிகள் மிகச்சிறந்த ஒன்றாகும். இத்தகைய விடுதிகள் பெரும்பாலும் படித்த இளைஞர்களுக்காகவே கட்டப்பட்டுள்ளன. புத்தறிவை நாடிச் செல்லும் இளைஞர்களுக்கு புகலிடமாக விளங்குகிறது. 1900-ல் முதன் முதலாக ஜெர்மனியில்தான் இளைஞர் விடுதிகள் ஒரு அமைப்பாகவும், ஒரு இயக்கமாகவும் மலர்ந்தன. பின்னர் உலகின் பல பகுதிகளுக்கும் பரவின. பொதுவாக இளம் ஆண் பெண்களுக்கு அதிலும் சிறப்பாக மாணவ மாணவியருக்கு குறைந்த செலவில் தங்குமிடமும் உணவும் வழங்குவதே இவற்றின் நோக்கம் ஆகும்.

பல்வேறு நாட்டைச் சேர்ந்த இளைஞர்கள் பல்வேறு இனம் மற்றும் மொழி பேசும் இளைஞர்கள் ஒன்று கூடுவர். அவர்கள் ஒருவருக்கொருவர் அறிமுகமாகி ஒற்றுமையாக பழக இந்த விடுதிகள் துணைபுரிகின்றன. இந்த விடுதிகளில் குறிப்பிட்ட எண்ணிக்கையுடைய நாட்கள் மட்டுமே தங்கலாம். இந்த விடுதிகளின் சில அறைகளில் சமையல் செய்யும் வசதிகளும் உள்ளன. தொடக்கத்தில் இளைஞர்களிடம் சுற்றுலா எண்ணத்தை வளர்ப்பதற்காகவே இளைஞர் விடுதிகள் அமைக்கப்பட்டன. இந்த விடுதிகளில் வாடகை மிகவும் குறைவு. இந்தியாவிலுள்ள இளைஞர் விடுதிகளில் ஐந்து ரூபாய் முதல் இருபது ரூபாய் வரைதான் வாடகை வசூலிக்கப்படுகிறது. சுற்றுலா செல்லும் மாணவ மாணவியர், ஆசிரியர் ஆகியோர்களுக்கு தனித்தனியாக தங்க இடவசதிகள் உண்டு. உலக அளவில் 3.5 மில்லியன் இளைஞர்விடுதி அங்கத்தினர்கள் உள்ளனர். அவர்களில் இந்தியாவில் மட்டும் 23,700 பேர் உள்ளனர் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இளைஞர்களிடையே சுற்றுலா எண்ணத்தை வளர்ப்பதில் இந்த இளைஞர் விடுதிகள் பெரும்பங்கு வகிக்கின்றன.

இளைஞர் விடுதிகளின் உலக அமைப்பாக செயல்பட்டுவருவது 'பன்னாட்டு இளைஞர் விடுதி கூட்டமைப்பு' (International Youth Hostel Fedoration) என்பதாகும். 1997-ம் ஆண்டு கணக்குப்படி இந்த கூட்டமைப்பில் 74 உறுப்பினர் நாடுகள் உள்ளன. உலகம் முழுவதும் 5,600 இளைஞர் விடுதிகள் உள்ளன. இந்தியாவில் 'இந்திய இளைஞர் விடுதிகள் சங்கம்' (Youth Hostels associations of India) செயல்பட்டு வருகிறது. 1997-ம் ஆண்டு கணக்குப்படி இந்தியாவில் 49 இளைஞர் விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. டில்லியில் ஒரு பன்னாட்டு இளைஞர் விடுதி உள்ளது. இந்த இளைஞர் விடுதி அமைப்புகள் விடுதிகள் அமைத்ததுடன் மட்டும் நின்று விடவில்லை. இளைஞர்களுக்கு மலையேற்றப்பயிற்சி, கடற்கரை நடைபயணம், முகாம் அமைத்தல், பாறைஏற்றம், எய்ட்ஸ் விழிப்புணர்வு, கல்வி சுற்றுலா, மற்றும்பல விதமான

போட்டிகள் நடத்தி வருகின்றன. இவ்வாறு இளைஞர் விடுதிகள் சுற்றுலாவில் முக்கிய அங்கமாக செயல்பட்டு வருகின்றன.

## d) வழியிடைத் தங்கல் மனை: (Camping Sites)

இவை நெடுஞ்சாலைகளில் நெடுந்தூரம் பயணம் செய்பவர்களுக்கா நிறுவப்பட்டவை ஆகும். அனைத்து வசதிகளையும் கொண்ட இந்த மனைகள் ஐரோப்பாவில் அமெரிக்காவிலும் பெரும் செல்வாக்கு பெற்று விளங்குகின்றன இவை 'திறந்தவெளி கூடார விடுதிகள்' என்று அழைக்கப்படுகிறது. இவை பெரும்பாலும் பெருநகரங்களில், நீர்நிலைகளுக்கு அருகாமையில் திறந் வெளியில் அமைக்கப்படும். இந்த விடுதிகளில் சிற்றுண்டி, தண்ணீர், பெட்ரோல் குளியல் வசதி, கார் நிறுத்த வசதி போன்ற அனைத்து வசதிகளும் இருக்கும் பொழுதுபோக்கு வசதிகளும் கூட உண்டு.

## e) படுக்கையும் சிற்றுண்டி வசதியும் உள்ள விடுதிகள்: (Bed and Breakfast hotels)

வழிப்பயணிகளுக்கு சிற்றுண்டியும் சிறிதுநேரம் படுப்பதற்கு படுக்கை வசதியும் செய்து தரும் விடுதிகள் இவை ஆகும். இவ்வகை விடுதிகள் பெரும்பாலும் வணிகர்களுக்கு பயன்படுகின்றன. இங்கு சிறப்பான உணவு வகைகள் கிடைக்காது. முக்கியமான பெரிய நகரங்களிலும், சந்தை கூடும் இடங்களிலும், கடற்கரைப் பகுதிகளிலும் இவை அமைக்கப்பட்டுள்ளன.

## f) சுற்றுலா விடுமுறைக் கிராமங்கள்: (Tourist Villages)

சுற்றுலாவை வளர்ப்பதற்கு கையாளப்படும் புதுமையான செயல் திட்டமே சுற்றுலாக்கிராமங்கள் ஆகும். இவை பெரும்பாலும் கடற்கரைகளிலும் சுற்றுலா முக்கியத்துவம் பெற்றுள்ள இடங்களிலும் அமைந்துள்ளன. இரண்டாம் உலகப் போருக்குப்பின்னர் இவ்வகையிலான கிராமங்கள் ஐரோப்பிய நாடுகளில் முக்கியத்துவம் பெற்றன. முதலில் பொழுதுபோக்கு நிறுவனங்கள், சமூக சேவை நிறுவனங்கள், சுற்றுலா நிறுவனங்கள் ஆகியவையே இவற்றை நிறுவின. இத்தாலி, ஸ்பெயின் போன்ற நாடுகளில் நலிந்த பகுதிகளில் இவை அமைக்கப்பட்டு பொருளாதாரம் சீர்திருத்தப்பட்டது.

இங்கே தங்க இடமும் உணவும் அளிக்கப்படுவதுடன் பொழுது போக்கிற்காக விளையாட்டு அரங்குகளும், கேளிக்கை வசதிகளும் செய்து கொடுக்கப்படுகின்றன. இங்கு கால்பந்தாட்டம், பூப்பந்தாட்டம், மேசை டென்னிஸ், குதிரை சவாரி, யோகாசனம் போன்ற பொழுதுபோக்கு அம்சங்களும் உண்டு. தொலைபேசி, வானொலி, செய்தித்தாள், தொலைக்காட்சி போன்றவை கொடுக்கப்பட்டிருக்கும். தாங்களே தங்கள் குடும்பத்திற்கு



சமைத்துப் பரிமாறிக்கொள்ளும் வசதியும் உண்டு. இனிமையாக வாழ்வதற்குச் சிறந்த பயிற்சிக் கூடமாகவும், ஒருவருக்கொருவர் மனம்விட்டு பழகும் பாங்கும் இதன் சிறப்பம்சமாகும். முதலாவது சுற்றுலாக் கிராமம் 1950-ல் ஸ்பானியத் தீவில் உள்ள மெஜோர்க்கா என்ற இடத்தில் நிறுவப்பட்டது. இதனை நிறுவியது 'மத்திய தரைக்கடல் கழகம்' என்ற நிறுவனம் ஆகும். அதன் பிறகு இந்த நிறுவனம் ஏறத்தாழ நூறு சுற்றுலாக் கிராமங்களை உருவாக்கியுள்ளது.

மேற்கண்ட விடுதிகள் அனைத்துமே சுற்றுலாவின் ஒரு அங்கமாக உள்ளது. விடுதிகள் இல்லாமல் சுற்றுலா வளர்ச்சியடைய முடியாது.

# III) சுற்றுலா மையத்தின் கவர்ச்சி
## (LOCALITY (OR) TOURIST ATTRACTIONS)

சுற்றுலாவின் அடுத்த முக்கியமான உறுப்பு சுற்றுலா மையமாகும். போக்குவரத்திற்கு நல்ல வசதி செய்யப்பட்டிருந்தாலும், தங்குவதற்கும் நல்ல வசதி செய்யப்பட்டிருந்தாலும் மட்டும் போதாது. சுற்றுலா முழுமையடைய வேண்டுமானால், சுற்றுலா முக்கியத்துவம் பெறவேண்டுமானால் சுற்றுலா மையமானது ஏதேனும் ஒரு வகையில் சிறப்பிடம் வகிக்கவேண்டும். ஒன்று பயணிகளைக் கவரும் வரலாற்றுச் சின்னம் அங்கு இருக்கவேண்டும் அல்லது கவர்ச்சி மிக்க இயற்கை எழில் கொஞ்சும் இடமாக இருக்க வேண்டும் அல்லது வழிபடக்கூடிய புனிதத் தன்மை கொண்டதாக இருக்கவேண்டும். எனவே ஏதேனும் ஒருவகையில் சுற்றுலா மையம் சிறப்பிடம் வகிக்கவேண்டும். அப்போதுதான் சுற்றுலாப் பயணிகள் அங்கு செல்வர். கீழ்க்கண்டவைகள் சுற்றுலாவின் பிற கூறுகளாகக் (elements) கருதலாம்.

## a) கவின்மிகு இயற்கைக் காட்சிகள் (Scenic attractions) :

சுற்றுலாவின் கவின்மிகு இயற்கை காட்சிகள் முக்கிய இடம் வகிக்கின்றன. உயர்ந்த மலைகள், அழகான நீர்வீழ்ச்சிகள், ஓடி வரும் ஆறுகள், அழகு கொழிக்கும் காடுகள், பெரிய ஏரிகள், மனங்கமழும் பூங்காக்கள், பள்ளத் , தாக்குகள், பனி மண்டலங்கள், கடற்கரைகள் ஆகியவை பயணிகளைக் கவரக் கூடியவை. மலைகளிலுள்ள அழகை ரசிப்பது, கடற்கரை காற்றை சுவாசிப்பது சுற்றுலா பயணிகளுக்கு மனமகிழ்ச்சியைக் கொடுக்கும். ஐரோப்பாவிலுள்ள ஆல்ப்ஸ்மலைகள், அமெரிக்காவிலுள்ள நயாகரா நீர்வீழ்ச்சி, ஐஸ்லாந்திலுள்ள வெப்பமிகு வெந்நீர் ஊற்றுகள், ஆப்பிரிக்கக் காடுகள், மியாமி, மெரினா, கோவா மற்றும் கோவளம் கடற்கரைப் பகுதிகள், பொங்கிவரும் கங்கை, அமேசான், மிசெளரி, மிசிசிப்பி நதிகள் ஆகியவை சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுக்கும் தன்மை கொண்டவை. இப்படிப்பட்ட இயற்கை அழகுதான் சுற்றுலாவை வளர்ச்சியடையச் செய்யும் சாதனங்களாக உள்ளன.

### b) மகிழ்ச்சியூட்டும் தட்பவெப்பநிலை (Amenable weather) :

சூரிய வெப்பம், தட்பவெப்பம், பனி, மழை போன்றவை சுற்றுலாவில் முக்கியப்பங்கு வகிக்கின்றன. நல்ல தட்ப வெப்பநிலைதான் பயணிகளைக் கவர்கிறது. கடற்கரைப் பகுதிகள் லட்சக்கணக்கான சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுக்கிறது. சில பயணிகள் குளிர்காலத்தையே விரும்புவர். அவர்களுக்காகவே சில குளிர்பகுதிகள் சுற்றுலா மையங்கள் ஆகியுள்ளன. அங்கு குளிர்கால விளையாட்டுகளுக்கு ஏற்பாடு செய்துள்ளனர். வெப்பப் பகுதியில் உள்ளவர்கள் குளிர்பகுதிகளை பார்த்து மகிழ, அனுபவிக்க சுற்றுலா செல்கின்றனர். கோடை வெயிலின் குளுமையைத் தேடி ஆயிரக்கணக்கானோர் கோடைவாசஸ்தலங்களுக்குச் செல்கின்றனர். உதாரணமாக இந்தியாவில் ஊட்டி, கொடைக்கானல், ஏற்க்காடு, ஷில்லாங், டார்ஜிலிங், நைனிடால், சிம்லா, ஸ்ரீநகர் ஆகிய கோடைவாசஸ்தலங்களுக்குச் செல்கின்றனர். எனவே ஓரிடத்தின் இதமான மிதமான தட்பவெப்பநிலை சுற்றுலாப் பயணிகளை பெரிதும் கவர்ந்திழுக்கின்றன என்பது தெரிகிறது.

### c) வரலாற்று மற்றும் பண்பாட்டு காரணிகள் (Historical and cultural factors):

பழமை மிக்க வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களும், பண்பாட்டு பெருமை கொண்ட இடங்களும் சுற்றுலாப் பயணிகளை பெரிதும் கவர்கின்றன. இடிந்து போன கோட்டை கொத்தளங்களும், பாழடைந்த கோவில்களும், பழைய அரண்மனைகளும், கோவில்களும், சிற்பங்களும், சிதைந்து போன நகரங்களும் மங்கிய பழமை மிக்க ஓவியங்களும் சுற்றுலாப் பயணிகளை வெகுவாக கவர்ந்திழுக்கின்றன. பழமையுடன் வரலாற்றுப் பெருமையும் பண்பாட்டுச்சிறப்பும் கொண்டு திகழும் ரோம், பெர்லின், பாரிஸ், லண்டன், டெல்லி, மாஸ்கோ ஆகிய நகரங்களைக் காண கோடிக்கணக்கான மக்கள் வருவதில் வியப்பில்லை. இங்கிலாந்திலுள்ள Stratford-on-Avon என்ற இடம் ஷேக்ஸ்பியருடன் தொடர்புடைய காரணத்தினால் அந்த இடத்தைக் காணவரும் பயணிகளின் எண்ணிக்கை உயர்ந்து கொண்டேயிருக்கிறது. உலக அதிசயங்களில் ஒன்றாக திகழும் தாஜ்மஹால், பைசாநகரிலுள்ள சாய்ந்த கோபுரம் மாமல்லபுரத்திலுள்ள சிற்பங்கள், டெல்லியிலுள்ள இரும்புத்தூண், மதுரை திருமலைநாயக்கர் மகால்,கஜுராகோ கோவில் ஆகியவை சுற்றுலாப் பயணிகளை கவர்ந்திழுக் கின்றன. இந்தியாவிலுள்ள அஜந்தா, எல்லோரா குகைகள் பயணிகளை மிகவும் கவர்ந்திழுக்கும் இடங்களாகும். இவ்வாறு வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்கள் சுற்றுலாவின் முக்கிய அங்கமாகத் திகழ்கின்றன.



### d) எளிதாகச் சென்றடையும் வசதி (Accessibility) :

சுற்றுலா மையங்கள் பயணிகள் எளிதாகச் சென்றடைதலான இடத்தில் அமைந்திருக்க வேண்டும். எளிதில் சென்றடைய முடியாத இடத்தில் இடங்களுக்குச் சுற்றுலாப் பயணிகள் செல்வது கடினம். எனவே சுற்றுலா மையம் சென்றடைய ரயில், பேருந்துகள் விமானம் மற்றும் வேறுசில போக்குவரத்துகள் இருப்பது அவசியம். மூலை முடுக்குகளிலும், காடுகளிலும் இருக்கக்கூடிய சுற்றுலா மையங்கள் அதிகமாக பயணிகளை ஈர்ப்பதில்லை. [illegible] எளிதாகச் சென்றடைய முடியாத இடத்தில் இருக்கின்ற காரணத்தில் இந்தியாவுக்கும் வரும் சுற்றுலாப் பயணிகள் பல இடங்களுக்குச் செல்ல முடிவதில்லை. எனவே சுற்றுலா மையம் புகழ் பெற அந்த இடத்தினை எளிதாக அடைய [illegible] போக்குவரத்து வசதிகள் இருப்பது இன்றியமையாததாகும். எனவே சுற்றுலாவுக்குரிய ஒரு காரணியாகும்.

### e) இனிய மனங்குளிரும் வாழ்க்கை வசதிகள் (Good living Condition) :

சுற்றுலா மையத்தில் பயணிகள் உல்லாசமாகப் பொழுதுபோக்குவதற்குப் பலவிதமான இதமான வாழ்க்கை வசதிகள் இருக்க வேண்டும். அன்றாட வாழ்வின் வசதிகளையும், பிற ஆடம்பர வசதிகளையும் கொண்டிருக்க வேண்டும். பல விதமான பொழுதுபோக்கு கேளிக்கை வசதிகளையும், வாய்ப்புகளையும் கொண்டிருக்க/வேண்டும். சூரியனின் தோற்றம், மறைவு, கடல் குளியல், மீன்பிடித்தல், நீர்சறுக்கு, மலைஏறுதல் ஆகியவற்றில் பயணிகள் இன்பம் கொள்ளுகின்றனர். இதுபோல விளையாட்டுப்பந்தயங்கள், நீச்சல்குளம், படகுவீடுகள், உல்லாச வசதிகள், அறுஞ்சுவை உணவுகள் ஆகியவையும் பயணிகளுக்கு இன்பம் அளிக்கின்றன. மேற்கூறப்பட்ட வசதிகள் இருந்தால் அந்த சுற்றுலா மையங்களுக்கு மக்கள் விரும்பிச் செல்வதுண்டு.

### f) சுற்றுலாவின் புவியியல் கூறுகள் (Geographical components)

H.ராபின்சன் என்பவர் 1979-ல் வெளியிட்ட தனது A geography of Tourism என்ற நூலில் சுற்றுலாவின் பூகோளக் கூறுகளைப்பற்றி விரிவாக எழுதியுள்ளார். அவை வருமாறு.

1) சுற்றுலாமையம் அமைந்துள்ள இடம்
2) சுற்றுலாமையத்தின் பரப்பளவு
3) இயற்கைக் காட்சிகள்

இயற்கைக் காட்சிகளில் மலைகள், செங்குத்தான பாறை, பள்ளத்தாக்கு ஆகியவை நிலம் சம்பந்தப்பட்டவை. ஆறுகள், ஏரிகள், அருவிகள், கடல், வெந்நீரூற்று ஆகியவை நீர்சம்பந்தப்பட்டவை. காடுகள், புல்வெளிகள், பாலைவனம், முட்புதர்க்காடு ஆகியவை வேளாண்மை சம்பந்தப்பட்டவை. 4)தட்பவெப்பம், இதில் சூரியவெப்பம், மேகம், தட்பவெப்பநிலை, மழை, பனி ஆகியவை அடங்கும். 6) குடியிருப்புகள்: இதில் நகரங்கள், வரலாற்று நினைவு சின்னங்கள், தொல்பொருள் ஆய்வு மையங்கள் இடம் பெறும். 7) பண்பாடு இதில் மக்களின் வாழ்க்கை முறை, நாகரிகம், மரபு, நாட்டுப்புறக் கலைகள், கைவினைப் பொருட்கள், இலக்கியம் போன்றவை அடங்கும். இவ்வாறு ராபின்சன் சுற்றுலாவின் பூகோளக் கூறுகளை வகைப்படுத்தியுள்ளார்.

மேற்கண்டவற்றில் போக்குவரத்து, தங்குமிடம், சுற்றுலா மையம் ஆகியவை சுற்றுலாவுக்குரிய அடிப்படைக் கூறுகள் என்பர். மற்றவைகள் சுற்றுலாவின் பிற காரணிகள் ஆகும். இவை அனைத்துமே சுற்றுலாவிற்கு அவசியமான கூறுகளாகும். இவ்வளவு கூறுகளும் ஒன்றிணைந்து செயல் பட்டால்தான் சுற்றுலா சிறப்புற்று வளர்ச்சியடைய முடியும்.

# 5. சுற்றுலாவின் வகைகள்

## (TYPES OF TOURISM)

சுற்றுலா என்பது இன்று எண்ணெய் தொழிலுக்கு அடுத்தபடியாக மிக முக்கியமான தொழிலாகக் கருதப்படுகிறது. இது ஒரு புகைவராத தொழிற்துறையாகும். (Smokeless Industry). நாட்டிற்கு அதிக வருமானம் தேடித்தருகின்ற தொழிலாகக் கருதப்படுகிறது. சுற்றுலா மூலம் ஒரு நாடு அதிக அளவு அந்நிய செலாவணி ஈட்டமுடிகிறது. எண்ணற்ற மக்களுக்கு வேலைவாய்ப்பினை அளிக்கிறது. சுற்றுலா சமூகத்தில் நடைபெறும் மற்ற தொழில்களுடன் சம்பந்தப்பட்டது. சுற்றுலாவின் தன்மை, நோக்கம், பயன்பாடு, தங்கும்காலம், இடம், தூரம் ஆகியவற்றின் அடிப்படையில் அது கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தப்படுகிறது.

### 1. உள்நாட்டு சுற்றுலா (Internal or Domestic Tourism) :

உள்நாட்டு சுற்றுலா என்பது ஒரு நாட்டிற்குள்ளேயே அந்த நாட்டின் எல்லைப்புறத்திற்கு உட்பட்டு நடப்பதாகும். இது மிகவும் எளிதான சுற்றுலா ஆகும். இந்த சுற்றுலாவில் நாணயமாற்று, மொழி, பாஸ்போர்ட், விசா, மருத்துவச் சான்றிதழ் போன்ற பிரச்சனைகள் ஏற்படுவதில்லை. பயணம்